உ

# மாணவர் விருந்து.

1. கரிகால சோழன் வெண்பா.
2. பொற்கைப் பாண்டியன் வெண்பா.
3. மனுச் சோழன் வெண்பா.

(செய்யுட் குறிப்புகளுடன் கூடியது.)


பசுமலை உயர்தர, போதனுமுறைக் கலாசாலைகளின்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா
இயற்றியது.



மதுரை:
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்.

[அணா 6.

1928.



1094
2888
5 - JUN 192
TB
031,6
X128.
180892

MEENALOCHANI PRESS, MADURA.

உ

# சாற்றுக் கவிகள்.

மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ

மு. ரா. அருணசலக்கவிராயர் அவர்கள் பாடியன.

சொன்மா ணவரசமுந் தோன்றத் தொகுத்துவைத்து
நன்மா ணவர்விருந்து நல்கினன்—பன்மாண்பு
பெற்றதமிழ் தேர்சுப் பிரமணிய சர்மாவென்
றுற்ற மறையோ னுவந்து.

அவ்விருந்துள் வந்துவந் தார்வ மகலாமற்
செவ்விருந்து வாழ்ந்தார் செழுந்தமிழைத்—துவ்விருந்
தாராத்தி நிம்பந் தகுமலராத் தாம்பெற்றார்
ஆராத் திரமொடுபா ரார்.

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்

மகா-ா-ா-ஸ்ரீ ரா. அரிஹரபாரதியார் அவர்கள் பாடியது.

காரான காலான்பொற் கையான் மனுவேந்தன்
சீரார் கதைவெண்பாச் செப்பினன்—ஆராய்ந்தார்
கூர்சுப் பிரமணியிற் கொள்ளும் பசுமலையென்
ஆர்சுப் பிரமணிய னும்.

ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகா, குன்னூர் பெரியவீட்டு

ஸ்ரீமாந். குமாரசாமிமுதலியார் அவர்கள் பாடியது.

மாணவர்வி ருந்தெனவோர் மா நூலுஞ் செய்தனன்செவ்
வேணலெழில் பெற்றோங்கும் விற்பனனற்—றூ ணுவடி
பேணு முயர்சுப் பிரமணிய சர்மாவாம்
மா ணுறுபேர் நான்மறைய வன்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் மகா-௱-௱-ஸ்ரீ

சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் பாடியவை.

பொன்னித் துறைவன் கரிகாலன்
பொற்கைச் செழியன் மனுச்சோழன்
என்னு மிவர்தம் கதைவெண்பா
இயற்றி யெழின்மா ணவர்விருந்தாப்
பன்னு பெயர்தந் தினிமையுடன்
பாரோர்க் களித்தான் பசுமலையில்
முன்னு புகழ்ச்சுப் பிரமணிய
மறையோன் தூய முறையோனே. (1)

வேறு.

இன்னமுதே என்ன எவரும் படித்தருந்த
மன்ன ரொருமூவர் வண்கதையை—இந்நிலத்து
வெண்பாவாற் றந்தான் மிளிர்சுப் பிரமணிய
வொண்பா வலவன் உவந்து. (2)

முந்நூலான் நன்னூலான் மூதுலகின் மாணவர்க்காம்
பன்னூல் வசனம் பரிந்து செய்வோன்—இந்நூலை
ஆக்கினன் வெண்பாவால் அன்னோர்க் கணிமதுர
வாக்கினல் உள்ள மகிழ்ந்து. (3)

கண்டுதேன் என்னக் களித்துக் கவிமதுரம்
உண்டுநான் கொண்ட உவகையினைக்—கொண்டிடுவர்
இந்நூல் படித்தோர் இயற்றியோன் சீர்மையினை
இந்நூலே கூறும் இனிது. (4)

குளித்தலை போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்
மகா-ா-ா-ஸ்ரீ க. நா. நரசிம்மையர் அவர்கள் பாடியவை.

தென்மதுரை மேவுந் திகழ்தமிழ்ச் சங்கமதில்
மன்னிடுமோர் அங்கத்தான் மாண்புலவன்—தென்மொழியிற்
பன்னூல்கள் ஆக்கியவன் பண்புறாஉம் மாணவர்கட்
கின்னூல் விருந்தளித்தான் இங்கு. (1)

மாணவர்க்கோர் நல்விருந்தை மாணுறவே தேர்ந்தளித்த
ஏணவிரும் ஓர்புலவன் யாவனெனில்—பேணலர்க்கும்
நன்றே புரிசுப் பிரமணிய நற்கவிஞன்
என்றேமுன் னின்றறைகு வேம். (2)

சீரார் கரிகாலன் செம்மைமனு பொற்கையான்
பேரார் இவர்சரிதம் பெட்புறவே—நேராக
வித்தகரும் போற்ற விரித்துரைத்தான் வெண்பாவில்
வித்தகச் சுப்ரமணி விண்டு. (3)

---

உ

# மாணவர் விருந்து.

## காப்பு.

சீர்பரவும் மாணவர்நற் சிந்தை மகிழ்வுறவே
ஏர்பரவும் ஓர்விருந்தை யானியற்றக்—கார்மருவும்
காவைப் பொருந்திக் களித்துலவும் யானைமுகத்
தேவைத் துணைகொண்டேன் தேர்ந்து.

## அவையடக்கம்.

மழலைமொழி கேட்டு மனமகிழ்பெற் றோர்போல்
விழுமிதெனக் கொள்வரிதை மேலோர்—பழிபெருகு
குற்றமுற யான்சொலினும் கூர்மதியால் இந்நூலின்
நற்றிறமே நாடி நயந்து.

# கரிகாற்சோழன் கதைச் சுருக்கம்.

நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய சோணாட்டின் தலைநகர் உறையூர். அந்நகர் கல்வியும் செல்வமு மிக்கது. ஆங்கொரு காலத்தில் இளஞ்சேட் சென்னி என்னும் மன்னவன் ஒருவன் அரசாண்டான். அவன் அழுந்தூர் வேள் மகளை மணஞ்செய்துகொண்டவன். அவனாட்சியில் குடிகளுக்கு ஐவகைப்பயமும் இல்லை.

இந்நிருபனுக்கு ஒரு அருமைப் புதல்வன் தோன்றினான். அம்மகவை மடிமீதும் தோள்மீதும் முடிமீதும் தாங்கிப் பெற்றோர் வளர்த்தார்கள். உரிய பருவத்தில் அவனைப் பள்ளியில் வைத்தார்கள். கல்வி கேள்விகளிலும் படைப் பயிற்சி முதலியவற்றிலும் அவன் சிறந்து விளங்கினான். சிலவருஷங்களில் இளஞ்சேட்சென்னி இறக்கவே, அவன் உறவினருள் ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, சோழன் மகனைக்கொல்லவும் வழிதேடினன். அதனை யறிந்த இளைஞன் தான் உயிர்தப்புமாறு பல இடங்களும் சென்று கடைசியில் கரூரில் வந்து மறைந்து வசிக்கலானான். அரசை அபகரித்துக்கொண்டவன் கொடுங்கோலனாதலின், குடிகள் அவனைப் பலவிதத்தும் துன்புறுத்திக் காட்டுக்கு ஓட்டிவிட்டனர்.

பின்னர், உறையூரிலிருந்த அறிஞர் ஒருங்குகூடித் தமது நாட்டை ஆள ஒரு நல்ல அரசனைப் பெறக்கருதி அவ்வூர் ஆலயத்துள் சென்று இறைவனைத் துதித்து, 'எந்தாய்! தக்க அரசன் இல்லாத இந்நாடு பெரிதும் வருந்துகிறது. எமக்கோர் செங்கோல் வேந்தனை அளித்தருள்க' என்று

வேண்டினர். அப்போது, 'கழுமலத்து முழுமுதற் கடவுளைத் தொழுது அக்கோயில் யானையையே ஒரு பார்த்திபனைத் தேடிக் கொணருமாறு அனுப்புமின்' என்று ஓர் அசரீரி வாக்குத்தோன்றியது. அங்ஙனமே அவ்வறிஞர் சீர்காழி நகர் சென்று இறைவனை ஏத்தி அசரீரி கூறியவாறு செய்தனர்.

புரவலனைத் தேடிப் புறப்பட்டுச் சென்ற அந்தயானை கரூர் வந்து அங்குக் கரந்துறையும் அரசனைக்கண்டு துதிக்கையாலவனைத் தூக்கித் தன் பிடரியில் ஏற்றிக்கொண்டு உறையூர் வந்து சேர்ந்தது. சோழும், யாவரும் மகிழ்ந்து அச் சிறுவனை அரியணை மீதேற்றினர். வயதில் இளையான் ஆன அவன், செங்கோல் செலுத்துவதிலும் இளையான் என்றுலகம் போற்ற இறைமை புரிந்தான். ஆயினும், நாடிழந்த கொடுங்கோலன் இளஞ் சோழனது இறைமையிற் பொறாமை கொண்டு, பல அரசர்களை யடுத்து அவர்கள் படைத் துணையால் உறையூரைக்கைப்பற்றிச் சிறுவனைச்சிறையிட்டுச்சிங்காதனத் தமர்ந்தனன். அரசிளங் குமரனும் தனக்காம் கால நோக்கி அருஞ்சிறையில் வருந்தி இருந்தனன்.

சின்னாட்களுக் கெல்லாம், அக் கொடுங்கோலன் சோழன் மகன் இறந்தொழியுமாறு சிறைச்சாலையில் தீ இட்டனன். ஆயினும் அவன் எண்ணம் பலிக்கவில்லை. சிறைப்பட்ட சிறுவன் தன் தாள்வலியால் தாளிட்ட கதவைத் தூளாக்கினான். கேளாரை வாளாலே வீழ்த்திக் கோட்டை முதலியவைகளைத் தாண்டி, நாட்டார் அகமகிழ வியாக்கிரமென ஆக்கிரமித்து நின்றான். அவன் தீயினின்றும் தப்பி வருங்காலை, காலில் ஒருபாகம் கரிந்து போயினமையின், அவனைக் கரிகாலன் என்றியாவரும் இயம்பலாயினர்.

கரிகாலன் வெளிப்பாட்டை யுணர்ந்த வெங்கோல் வேந்தன், தன் சேனைகளோடு வந்து எதிர்த்துப் பொருது பின்னிட்டான். அவனது வீரர்களிற் சிலர் ஓடினர். சிலர் உருமாறினர். சிலர் பிணக்குவைகளில் ஒளித்துக் கொண்டனர். பலர் பின்னிட்டார்க்கு முன்னிட்டனர். சிலர் கையிழந்தனர். சிலர் காலிழந்தனர். வேறுபலர் கரிகாலனைச் சரணடைந்தனர். இவ்வாறு தனது சேனை சிதறுண்டதால் மனமுடைந்த தகவிலா மாற்றரசன், மான முந்தவந்து தன்னந்தனியே பொருதான். கரிகாலனும் அவன் சென்னியைச் சேதித்து செயத்தம்ப நாட்டிச் சிங்கமெனச் சிங்காதனத் தமர்ந்தனன்.

தன்னாட்சியை மீண்டும் எய்திய கரிகாலனுக்குத் திக்கு விசயத்தில் விருப்ப முண்டாயிற்று. நால்வகைச் சேனைகளும் நாற்கடல்போற் சூழ்ந்துவர, நன்னாளில் தென்திசை நோக்கிச் சென்று மதுரையை முற்றுகை இட்டான். இடலும், பாண்டியன் அரிகாணும் கரியென அஞ்சித் திறையளந்தான். பிறகு மேற்றிசை நோக்கிச் சென்று வழியில் தன்னை எதிர்த்தோரை இறுமாப்படங்க வென்று, வஞ்சியைச் சூழ்ந்தான்.

அந்நகர வேந்தனாகிய பெருஞ்சேரலாதன், அவனையெதிர்த்துத் தோற்றுப் புறப்புண் நாணி உயிர்துறந்தான். பிறகு, இடையில் எதிர்த்த மன்னவரையும், குறுநிலக் குரிசிலரையும் மறுநில மன்னராக்கி வெற்றிமாலை விளங்க வடதிசை நோக்கிச் சென்றான்.

ஆங்கு ஆரியநாட்டு மன்னவர் பலரை மேற்கொண்டு தன்போக்குக்கு இடையூறாக நின்ற இமயவரையைச்செண்டு

என்னும் படையால் திரித்து அதன்மேல் அவனுக்குரியபுலிக் கொடியை நாட்டித் திரும்பி வச்சிரநாட்டு வேந்தனையும், அவந்தி நாட்டு அரசனையும், மகத நாட்டு மன்னவனையும் வென்று விளங்கினான். இங்ஙனமே இமசேது உள்ளிட்ட உலகம் முழுதும் தன் கீழ்ப்படுத்தி, வெற்றிச் சின்னங்கள் முழங்கவும், அந்தணர் வாழ்த்தவும் உறையூரிற் புகுந்தான். நாமகள் நாவிருக்கவும், சயமகள் புயத்திருக்கவும், மாமகள் மார்பில் விளங்கவும் கரிகாலன் பின்னர் மன்னர் மன்னனாய் மாநிலம் முழுதும் ஒரு குடையின்கீழ் ஆண்டனன்.

சிறு பருவத்திலேயே திக்குவிஜயம் செய்து விளங்கிய இவ்வளவனது அவையைச் சில முனிவர் ஒருநாள் வந்து அடைந்தனர். அடைதலும், செம்பியன் அவர்களை எதிர் சென்றழைத்து உபசரித்து, 'நீங்களிங்கு வந்தது என் மாதவப் பயனே. வந்தகாரணம் யாதோ?' என்று விசாரித்தான். முனிவர் அவனை நோக்கி, 'உனக்கோரிதம் கூறுதற்கு இங்கு வந்தோம்: இவ்வுலகில் இடம் பொருள் ஏவல் அறிவு வலிமை முதலியவற்றால் ஒருவருக்கு எவ்வளவு ஏற்றம் ஏற்பட்டு இருப்பினும் மக்களில்லையாயின், அவையாவும் பயனற்றனவாம். ஆதலின் நீ விரைவில் ஒரு மனைவியை யடைந்து மக்கட் பேற்றைப் பெறுக' என்று கூறிச்சென்றனர்.

அவ்வான்றோர் ஆணையைத் தலைமேற்றாங்கி நாங்கூர்வேள் மகளை நல்லோரையில் அவன் நன்மணம் புரிந்துகொண்டு, உலகத்திற்கோர் தந்தை தாய் என்னுமாறு ஒரே சந்திர வட்டக்குடையின் கீழ் வெகுகாலஞ் செங்கோல் செலுத்தி வந்தனன். அக்கால் இவ்வளவன் உறையூரை விட்டுக் கடற்கரையடுத்தகாவிரிப்பூம்பட்டினத்தைக் கட்டி அதைத் தலைநகராக்

ராக்கினான். அப்பட்டணம் இருபிரிவாகக் கட்டப்பட்டது. கடற்கரையடுத்த பாகம் மருவூர்ப் பாக்கம் என்றும், அதற்குக் குடக்கிலிருந்த பாகம் பட்டினப்பாக்கம் என்றும் பெயரிடப் பெற்றன. பட்டினப் பாக்கத்திற் கரிகாலனது அரண்மனை இருந்தது. மருவூர்ப் பாக்கத்தில் பல தொழிலாளரும், வர்த்தகர்களும் குடியேறியிருந்தனர். இவ்விரு பாகங்களுக்கும் இடையில் உள்ள வெளியிடத்தில் ஒரு சந்தைகூடி இருந்தது. இது நிற்க.

ஒரு நாள் இருவர் தங்கள் வழக்கை எடுத்துரைக்க கரிகாலன்பாற் சென்று, அவன் இளையவனாக இருத்தலை நோக்கி 'இவன் நீதியை ஆய்ந்து உரைக்கு மாற்றல் பெறு இளைஞன்' என்று பேசிக்கொண்டே திரும்பிவிட்டனர். அதனையறிந்த அரசன் அவர்களை யழைத்து, 'என்பால் வந்த நீங்கள் ஏதும் சொல்லாது திரும்பியதற்குக் காரணம் யாது' என்று வினவினன். அவர்கள், 'எங்கள் வழக்கைக் கூறவந்தோம். நீதி கூறுபவர் மனுமுறையிற் சிறந்து, வந்தவர்கள் செயலைக் கண்டறிந்து, நுட்ப புத்தி மிகவாய்ந்து, உள்ளத்தைத் துலாக்கோல்ஆக்கவல்ல முதியவராகஇருக்கவேண்டும். ஆண்டில் நீ சிறியனாதலால், உன்னிடம் நீதிபெற முடியாதென்று நாங்கள் திரும்பினோம்' என்றார்கள்.

இதனைக் கேட்ட பொன்னி நாடன், 'அன்பரே! நீவிர் விரும்பியவாறு சூழ நரைத்த ஒரு கிழவனையே வழக்கைத் தீர்க்கச் சொல்லுகிறேன். நாளையேவந்து வழக்கைச்சொல்லி நீதியைப் பெறுக' என்றுரைத்தான். மறுநாள் அவ்விருவரும் நீதித்தலம் அடைந்தனர். ஆங்கு ஐங்குழுவோர் தன்னைச் சூழ்ந்திருக்க ஒரு கிழநீதிபதி ஆதனத் தமர்ந்திருந்தனன்.

வழக்குரைப்போர் அவன்பால் தத்தம் வழக்கைப் பின் வாங்காமல் எடுத்துரைத்தனர். அவர்கள் கூறியவற்றில் உண்மை இதுவென உய்த்துணர்ந்த முதியவனான நீதிபதி, எள்ளின் காய் பிளந்ததுபோல் நியாய முடிவை எடுத்தியம்ப, வழக்கில் தோற்றோனும் அவன் கூறிய முடிவால் மனமகிழ்ந்தனன்.

அந்தவேளை கிழவுருவுடன் இருந்த அந்நீதிபதி, கண்டோர் யாவரும் வியக்குமாறு அக்கிழவுருவை நீக்கி இளவுருவுடன் அவர்முன் நின்றார். அவன் யாரென அறிவீர்களா? அவனே நம் கரிகாற் புரவலன் என்னும் காவலர் பெருந்தகை. அவனது செயலைக் கண்டோர் யாவரும் பெரிதும் கொண்டாடி, 'சோழகுல விச்சை கல்லாமற் பாகம் படும்' என்று ஒருசேர எடுத்தியம்பிச் சென்றனர்.

# மாணவர் விருந்து.

## 1. கரிகால சோழன் வெண்பா.

### காப்பு.

செந்தமிழாற் செப்பச் சிவபெருமான் தந்தருளும்
தந்திமுகன் பாதந் தலைக்கணிவாம்—முந்து
கரிகாலன் ஊர்புகுதக் காய்ந்துடற்று கோழிக்
கரிகால சோழன் கதை. (1)

### நாடு.

பூவிரிக்க வண்டர் புதுத்தேறல் வார்ந்தொழுகிக்
காவிரிக்கண் கூடிக் கடுகிமடை—தாவித்
தின்நாறு செய்விளைக்குஞ் செல்வஞ்சேர் நாடு
புனனாடே என்ப புகழ்ந்து. (2)

### நகர்.

செல்வமொடு கல்வி சிறந்து பலவளனும்
பல்கி யமரர் பதிமானும்—தொல்லைக்
கறையூர் மதிக்கன்றி வேறுகறை காணா
உறையூரென் றோர்நகரா முண்டு. (3)

### நூல்.

இங்குருவப் பஃறேர் இளஞ்சேட்சென் னிப்பெயரோன்
மங்கை அழுந்தூர்வேண் மான்மகளை—அங்கிமுனர்
மொய்ம்பினொடு வேட்டு முனிவர் பதந்தொழுது
ஐம்பயந்தீர்த் தாண்டான் அரசு. (4)

அலையார் புனனாட் டரசர்கோன் பன்னிச்
சிலையார் புருவத்துச் சீர்க்கோ—சலையார்
திருக்கொண்டல் தன்னைத் திருவயிறுற் றாங்குக்
கருக்கொண்டாள் பன்னாட் கழித்து. (5)

திங்கள் சிலசெல்லத் தேவியவள் தோளினைத்தே
அங்கம் பசுநரம்புற் றார்ந்துசெழும்—பங்கயத்தை
வென்ற முகம்வெளுத்து மெல்லுதர முங்கனத்து
நின்றனணற் கர்ப்பம் நிறைந்து. (6)

மாதம்பத் தாக மருவியநல் லோரைதனில்
மாதம்பத் தானை மருவலர்க்கு—மாதம்பம்
வந்தான் இணைகூற வந்துதித்தான் சோழர்குலம்
சிந்தாத வண்ணமொரு சேய். (7)

கண்ணையிமை காப்பதுபோல் கான்முளையைக் காதலித்து
வண்ணமுற ஈன்றோர் வளர்த்தனரால்—நண்ணு
மடிமீதுந் தோண்மீதும் மாலைமண நாறும்
முடிமீதுந் தாங்கி முயன்று. (8)

நீந்தித் தவழ்ந்தேகி நின்று தளர்நடையாற்
போந்து குதலை புகன்றுபொடி—ஆர்ந்தளைந்து
சிற்றில் சிதைத்துவருஞ் செல்வனைக்கண் டுண்மகிழ்வு
பெற்றிருந்தான் சோழர் பிரான். (9)

கொடைக்குரிசில் பெற்ற குமரனன் னீதி
நடைக்குரிய நூல்பயின்றந் நாளில்—படைக்கேய்
கலைகளெலாம் கற்றுயர்ந்தான் கன்றிவரு மொன்னார்
தலைகளெலாம் தத்திவிழத் தான். (10)

## நாட்டை இழந்து மீண்டும் பெற்றது.

இன்னவா றின்புற் றிவனிருக்க ஈன்றெடுத்த
மன்னவனுஞ் சென்னியுயர் வான்புகுந்தான்—பின்னாவன்
தாயத் தொருவனிறை தானு யிளவரசை
மாயத்தாற் கொல்வான் மதித்து. (11)

தேடினான் அஃதறிந்த சேயுமுறை யூர்நீங்கி
யோடினான் தப்பி யுயிர்பிழைத்தே—நீடிசையால்
மெச்ச விருந்தார்க்கு மேவுமன்றோ ஊழ்வழியே
பிச்சைபுகுந் துண்ணும் பிழைப்பு. (12)

மருவூ ரணைத்து மனமாழ்கிச் சென்றே
கருவூரிற் றன்னைக் கரந்து—மருவூரும்
ஆரிருந்தார்த் தோட்சேய் அயர்ந்திருந்தான் வாழ்வினிடை
ஆரிருந்தார் அல்லலுறு தாங்கு. (13)

இறையோன்சே யிங்ஙனிருப்ப விகலுற்
றுறையூர்க்கு வேந்தென்ன வுற்றோன்—முறையில்
கொடுங்கோல் புரியக் குடிகளவன் அப்பாற்
படுங்கோள் புரிந்தார் பகைத்து. (14)

பேணாக் குடிகளினாற் பீடிழந்தோன் காடடையக்
கோனா துலகளிக்கும் கொற்றவனில்—சோணாடு
திங்களிலா வான்போற் றிருநாண் இலாக்களம்போல்
மங்கலுற்று நின்றதுசீர் மாய்ந்து. (15)

வீர மரிதன்னை விஞ்சைகலை மங்கையைமால்
தார மரிதன்னைத் தண்ணீதி—சாரமனு
நூலை நடுநிலைமை நுண்டுலையை நோக்கியவே
வேலை யுலகின் மெலிந்து. (16)

இன்ன புனலு டெழில்ழிந்து சோர்வுமிக
அந்த கரிலுற்ற ஆசறிஞர்—மன்னனை
ஒருவனைநா மெய்துதற்கிங் கும்பர்பிரான் செப்ப
திருவடியே தஞ்சமெனத் தேர்ந்து. (17)

திருக்கோயில் போந்து திருமுன்னர் வீழ்ந்தே
இருக்கோ விடும்பொருளே எந்தாய்—செருக்கினனைச்
செங்கோ னெறியிற் றிறம்பி அரசிழந்தான்
வெங்கோல னயநவ வேந்து. (18)

நல்லனொரு பார்த்திபனை நாங்களினிப் பெற்றிடவும்
பொல்லனினி வாராமற் போயிடவும்—நல்லருளை
இங்கெமக்குத் தந்தருள்க வென்று றுடனெழுந்த
தங்கொருவாக் கந்தரத்தில் அன்று. (19)

கழுமலத்தின் கோயிற் களிற்றினைநீர் போற்றிப்
பழுதிலொரு பார்த்திபனைப் பார்த்தே—விழுமமுறத்
தந்திடுக வென்னிற் றருமா லதனையே
உந்திடுக மன்வரவை ஓர்ந்து. (20)

என்றருளக் கேட்ட விறைவ னடிபரவி
அன்றவர்கள் காழி யணிநகரிற்—சென்று
செருவூரு நற்கரியைச் செல்கவென வாங்கே
கருவூரே கிற்றக் களிறு. (21)

ஒளித்திருக்குஞ் சோணாட னுற்றவிடந் தேடிக்
களித்தெடுத்து மத்தகத்துட் கார—வளித்து
நிறையூர் தொடர நெருங்கியங்க ளார்ப்ப
உறையூர் கொணர்ந்த துவந்து. (22)

கரியரிதிற் றந்திட்ட காவலனை யான்றோர்
அரியணையின் மீதே யமர்வித்—துரிமைபெலாங்
கையாண் டலகிடத்தைக் காக்கவெனச் செய்காத்தான்
மெய்யாண்டுஞ் சென்றுலவ வே. (23)

## சிறையுற்று நீங்கி ஆட்சிபெறல்.

இடையி லரசாய் இருங்கா னடைந்தோன்
படையிலகு மன்முறையைப் பார்த்தே—புடைபடவே
நெஞ்சங் கனன்று நிருபர்பலர் சூழ்துணையா
வஞ்சங் கரந்துறையூர் வந்து. (24)

காவற் படையைக் கடிந்துடற்றிக் காசறுசீர்க்
காவலன்றன் கான்முளைகை கால்யாத்து—மேவும்
சிறைக்கோட்டத் திட்டுமுன்போற் சிங்கவணை சாரும்
இறைக்கோட்டத் துற்று ணிவன். (25)

வீந்தான் பிழைத்த விதம்போல மீண்டுமிவன்
வேய்ந்தான் முடியென்ன வெம்பியுளம்—தேய்ந்தவராய்
நாட்டுக் குடிகளிறை நல்வரவு பார்த்திருந்தார்
மீட்டுங் குறுகுமென மேல். (26)

இறைமகனு வந்தோன் இகல்வேந்தால் ஒடி
மறைமகனு வுற்றங்கு வாழ்ந்து——சிறையில்
வெறுத்திருந்த சோழன்றான் மீளுநாள் நோக்கிப்
பொறுத்திருந்தான் பன்னாட் புலர்ந்து. (27)

திங்கள் சிலசெல்லச் சேட்சென்னி பெற்றமகன்
அங்கண் சிறையோ டவிந்துபட—அங்கிதனை
மூட்டினன் தெவ்வரையன் மூண்டெழுந்த வவ்வெரியும்
வாட்டியதம் மன்மகனை வந்து. (28)

தாளாற் றளைதகர்த்துத் தாட்கதவைத் தான்பொடித்து
வாளாற் பகைவர்களை மாய்த்தெறிந்து—கோளார்
மதிற்குலத்தைத் தாவியே வாளரிபோல் ஆர்த்தான்
கதிர்க்குலத்துக் கான்முளையக் கால். (29)

தண்டெரியற் சோழன் தனயனிவன் சீயம்போல்
மண்டெரியைத் தாண்டி வரும்பொழுது—கண்டார்
எரிகாலிற் பற்றி யெரிந்ததனுக் கேற்பக்
காரிகால னென்றுரைத்தார் காண். (30)

வீரன் வெளிப்படவே வெவ்வரையன் சேனையுடன்
தீரமுடன் தாக்கத் திருப்பினான்—ஆரும்
புனனாட்டு மன்மகனும் பொள்ளெனச்சென் றேற்றான்
கனல்காட்டுங் கண்ணான்போற் காய்ந்து. (31)

வாளெடுத்தல் காணாகில்லார் மற்றவன்றன் போர்காணார்
நீளெடுத்து நின்றவர்கள் நேர்கண்டார்—கோளில்
தலைமலையுந் தோள்வரையுந் தாட்குவையுஞ் செந்நீர்
அலைமலையு மாற்றொழுக்கு மாங்கு. (32)

சிந்துரங்கள் சிந்துரமாத் தேர்மாவு மாவாக
வந்தபடர் நொந்துபட மாய்ந்தனரே—நந்தம்
அலைத்தலைகள் சிந்தும் அரும்பொன்னி நாடன்
புலைத்தலைவே லொன்றுதொட்ட போழ்து. (33)

தானொருவ னாகச் சமராடுந் தோன்றலுக்கம்
மாநகரேய் மன்பதையும் மற்றையரும்—தானையென
மெய்த்துணையா வந்துற்றார் வேண்டார் பலர்மாண்டார்
எய்த்துணையா நின்றார் எவர். (34)

ஓடியுங் கொண்ட வருமாறி யும்பிணத்தான்
மூடியு முட்கி முதுகளித்து—மோடியென
ஆடியு மன்னன் அடிபணிந்து மம்பரணி
பாடியு முய்ந்தார் பலர். (35)

இன்னண மாக இடையி லரசான
மன்னவனு மானமுடன் வந்துபொர—அன்னவன்றன்
சென்னி யரிந்து செயத்தம்பம் நாட்டினன்சேட்
சென்னிதவத் தால்வந்த சேய். (36)

அப்பாற் கரிகாலன் றொன்மை யரியணைமேல்
எப்பா லவரு மினிதேத்தத்—துப்பார
வீற்றிருந் தாண்டான் வியனிலத்திற் கொண்டதறம்
நாற்றிருத் தாளா னடை. (37)

## திக்கு விசயம்.

இசையிசையு மாவளவன் எவ்விடத்து மேகித்
திசைவிசயஞ் செய்துவரச் சிந்தை—நசையிசைய
நன்னளிற் றேரூர்ந்தா னற்படையு நாற்கடல்போல்
முன்னுகத் தெற்கு முகம். (38)

மலையனைய தேரும் மதகரியும் வாரி
அலையனைய மாவும்பே ராழி—நிலையனைய
காலாளும் கொண்டு கடிமதுரை போய்வளைத்தான்
வேலாளும் கையான் விரைந்து. (39)

கரிகால னூர்வளைப்பக் கைதவர்கோன் றன்கண்
எரிகாலச் சீற்றத் தெழுந்தே—அரிகாண
நெஞ்சயருங் குஞ்சரம்போ னின்று திறையளந்தான்
அஞ்சலிசெய் செங்கரத்தா லாங்கு. (40)

இறகிற் பறவா எழிலுறுகொக் கேறித்
திறலுறவே மேற்றிசைக்கட் சென்றான்—மறலார்
கடங்கலுழும் யானைபரி காலாள்தேர் என்னும்
தடங்கடல்கள் தற்சூழத் தான். (41)

போகும் நெறியிற் பொருகுறும்பர் வீறடக்கி
வாகை புனைந்துதிறை வாங்கியே—ஓகைப்
பொழிலும் பொருப்பும் புனமும் புனல்சேர்
கழியுங் கழியக் கடந்து. (42)

பெருவஞ்சி சூழப் பெருஞ்சேர லாதன்
செருவஞ்சி டாப்படையிற் சென்று—கருவஞ்செய்
தேற்றுநின்றான் அப்பொழுதே எப்படையும் பின்னடைந்து
தோற்றுநின்று சோர்ந்த தொலைந்து. (43)

ஆங்கதுகண் டாற்றா தறச்சினந்த கோதைசிலை
வாங்கிச் சரமா மழைபொழிந்தங்—கோங்குபுகழ்
வில்லவனும் பேரை விளக்கிடலும் சோழகுல
வல்லவனோர் வில்லை வளைத்து. (44)

ஒருவாளி ஏவ அஃதுதியன் ஆகத்
திருமார்பிற் போந்துபுறஞ் செல்லச்—செருவார்
புறப்புண்ணை நாணி வடக்கிருந்தான் போரில்
இறப்புண்ணல் அஞ்சா விவன். (45)

வாகைப் புரத்தெதிர்ந்த மன்னரையும் வேளிரையும்
ஓகைக் குறும்பரையும் உற்றடக்கி—வாகை
மருமாலை தோளிலங்கச் சென்றான் வடக்கண்
திருமாலை ஒத்திலங்கு சேய். (46)

தூரியங்கள் ஆர்ப்பத் துணைப்படைகள் சூழ்ந்துவர
ஆரியரை வென்றுவகை ஆங்கடைந்து—சீரிமயம்
நின்று தடுப்பவதை நீள்செண்டி னூற்றிரித்து
வென்றுபுலி மேற்பொறித்தான் வேந்து. (47)

மாநீர் அணிவச் சிரநாட்டு மன்னளித்த
பூநீர் மணிப்பந்தர் போந்திலங்க—வானீர்மை
வாரணங்கள் சூழவந்தி வாழ்வேந்தன் வாயிலணித்
தோரணமும் கொண்டு தொடர்ந்து. (48)

மாமகதம் வெல்வான் வரவும் மகதையர்கோன்
வீமமுறு வீரருடன் வீறுரைத்துத்—தோமறுபோர்ப்
பின்னிட் டிடாதுடற்றிப் போரசன் நீள்படையால்
வெந்நிட்டு நின்றான் விரைந்து. (49)

மானந் தனைத்துறந்து மாவளவ னைப்பணிந்தே
ஈனமுடன் றன்னுயிர்கொண் டுண்டளித்தான்—மானக்
கடகரியும் கந்துகமும் கற்பணியும் காசாம்
வடவரையும் மண்டபமும் மற்று. (50)

இன்னணமே இன்புற் றிமசேதி ருகவென்ற
பொன்னனங் கழற்காற் புரவலனும்—சின்னம்
முறைமேய முழங்க முதுமறையோர் வாழ்த்த
உறையூர் புகுந்தான் உவந்து. (51)

வெண்மலரால் நாவிருப்ப விந்தை புயத்திருப்பத்
தண்மலராள் ஆகமதில் தானிருப்ப—அண்ணல்
அருகுடையோர் போற்ற அரியணைமேற் சார்ந்தான்
ஒருகுடையின் நிற்ப வுலகு. (52)

## திருமணம்.

ஓர்நாட் சிலமுனிவர் ஓங்கவைக்கட் சாரத்
திருமா வளவனெதிர் சென்றென்—பெருமா
தவப்பயனீர் போந்ததெனத் தாழ்ந்திருக்கை நல்கி
உவப்பவிருந் தானிருக்கை உற்று. (53)

வந்த தருள்கவென மாமுனிவர் ஆசிதொடுத்
தந்தமில்சீர் வேந்தே அருட்கடலே—முந்தையர்போல்
நல்லுலகம் காக்கும் நலத்தைநின்பாற் கண்டொன்று
சொல்லுவான் ஈண்டடைந்தோம் சூழ்ந்து. (54)

இடம்பொருள் ஏவல் எனச்சொலிம் மூன்றோ
டெம்படுநன் ஞான வுயர்வும்—படர்ந்த
செயிர்தீர் புயவலியும் சேயரிலார்க் கென்னும்
உயிர்தீர்வு பெற்ற வுடம்பு. (55)

உள்ளப் பிணியை உடல்நோவை இன்மையெனும்
வெள்ளத் துயரை விரைந்தகற்றி—மெள்ள
உருகா மனமுருக்கும் ஒண்மழலைத் தீஞ்சொன்
முருகார் குழவி முகம். (56)

மக்களில் லாத மனைகாடே மன்னறமும்
மக்களில தாயின் வளமிலதே—மக்களெழிற்
கையளையாச் சோறும் கமழ்விலதே வாயூறல்
மெய்யளையா தாயின் விழல். (57)

தம்பொருள் என்பதம் மக்கடமைச் சான்றோர்கள்
இம்பரிசை வேந்தே இரவிகுலம்—வெம்பியிடை
இற்றுவிடா தோரணங்கை இன்னே மணந்துமக
வுற்றிடுதல் எங்கட் குவப்பு. (58)

சொன்னேம் எனுமுனிவர் சொல்லதனைச் சோழனுயர்
பொன்னேபோற் கொண்டவரைப் போற்றினனால்—இன்னே
உத்தமரே உங்கள் உரைப்படியே செய்வனென்றான் [யான்
தத்தமிடம் உற்றார் தவர். (59)

திருமணத்தைக் கொள்வான் திருமா வளவன்
திருவுளத்திற் கோடல் தெரிந்து—நிருபர்
விரைந்துதா மீன்றநலார் மெய்யழகை ஆங்கே
வரைந்துய்த்தார் சென்னி மகற்கு. (60)

வந்த நிருபத்தில் வண்மைகூர் நாங்கூர்வேள்
தந்த மகளழகிற் றான்மயங்கிச்—சிந்தை
பதியவைத்தான் ஆங்கதனைப் பார்த்தறிந்தார் எண்ணில்
மதியமைச்சர் யாரும் மகிழ்ந்து. (61)

நாங்கூர்வேட் கிச்செய்தி நல்லோர் தெரித்திடத்தன்
பாங்கூர்நற் காலம் பலித்ததெனத்—தேங்கூரும்
தார்வனைதோள் வேளுமெழிற் றன்மகளைத் தானளிக்கும்
ஆர்வமறி வித்தான் அவர்க்கு. (62)

பெருவேள் விருப்பதனைப் பேரமைச்சர் வேற்கை
ஒருவேள் அனையாற் குறைத்துக்—கருவேளின்
வில்லைநிகர் நன்னுதலை வேண்மகளைத் தான்மணக்க
ஒல்லைவரு விக்கவென்றான் ஓர்ந்து. (63)

கொற்றவன்றன் ஏவலைக் கொண்டவர்கள் நாங்கூர்வேள்
சுற்றமுடன் சூழ்ந்துவரத் தோகைதனைப்—பொற்றவொரு
பல்லக்கி லேற்றியுபர் பல்லியங்க ளார்ப்பவுற்றார்
ஒல்லை யுறையூ ருவந்து. (64)

வல்லோர்ரை மேற்கொண்ட மாவளவன் வேண்மகள்கை
நல்லோரை தன்னி னயந்துகொண்டான்—வில்லோர்
வரையான் மலைமகளை மால்திருவை வேதன்
மரைமகளைக் கொண்டதுபோல் மற்று. (65)

வேய்தந்த தோளியுடன் வேந்தர்க்கு வேந்தாவான்
தாய்தந்தை என்னச் சகம்புகழத்—தூய்தந்த
சந்திரன்போல் தண்கவிகை தானிழற்றத் தன்னிகரில்
இந்திரன்போல் வீற்றிருந்தா னீண்டு. (66)

காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகர் ஆக்கியது.

அடலால் அருளால் அருளிசையாற் றம்மைக்
கடலே பொருவுமெனக் கண்டோ—தடனூர்
உறையூரை விட்டுவரி யொன்றுபுகா ரேதான்
உறையூராக் கொண்டா னுவந்து. (67)

குடிகொண்ட பூப்புகார்க் கோனகரே யாக்கும்
படிகொண்ட நெஞ்சுடையான் பாரில்—அடிகொண்ட
மாமலையே வந்து வளைந்ததெனவகுத்தான்
ஏமவகழ் சூழ மெயில் (68)

காரார் மதிலுடுத்த காவிரிப்பூம் பட்டினத்துள்
பாரார் புகழ்மருவூர்ப் பாக்கமெனச்—சீராரும்
பட்டினப் பாக்கமெனப் பாகுபடுத் தவ்விடத்தில்
மட்டின்றிக் கண்டான் மறுகு. (69)

ஆலயத்தைச் சூழ்ந்துயர்ந்த அந்தணர்தம் வீதிபல
வேலணியும் வேந்தர்கள் வீதிபல—கூலமுதல்
விற்பவரின் வீதிபல மேழியர்தம் வீதிபல
பொற்புறவே செய்தான் புரிந்து. (70)

நான்குபடை சேர்மறுகும் நற்கவிவா ணர்மறுகும்
தேன்குலவு பூத்தொழிலார் சேர்மறுகும்--வான்குலவும்
அம்பலங்கள் மன்றம் அறச்சாலை ஆதியவும்
பம்பலுறச் செய்தான் பணி (71)

பாணர் உமணர் பரதவர்கள் துன்னுதொழில்
வாணர் படிவம் வகுத்திடுவோர்—பேணுமிசை
நாற்கருவி செய்திடுவோர் நல்லோ ரிபர்மறுகும்
ஏற்குமுறை செய்தா னிறை. (72)

மலங்கு திரைத்துறைக்கண் வந்தடுப்ப நாவாய்
கலங்கரைவி ளக்கமும் கண்டான் — இலங்குபல
தேயந் தருபொருட்குச் சீறு புலிபொறிக்கும்
ஆயத் துறையமைத்தான் ஆங்கு. (73)

இவ்வுலகத் துற்றவர்கள் எல்லாரு முய்த்துணரில்
எவ்வமிலாச் சோதரரே என்பதனைத்—துவ்வுமுறை
காணுநர்கள் போலக் கடற்கரையிற் பன்னுட்டார்
மாணுறவே வாழ்வர் மகிழ்ந்து. (74)

கான்பொருளாற் காநாடு காண்பொருளான் மாநாடே
வான்பொருப் பின்பொருளால் மாமலையே—மீன்பொருப்பின்
தாவிரிக்கு மாழி தருபொருளால் வாரிதியே
காவிரிப்பூம் பட்டினமே காண். (75)

எந்நகர்க்கண் உள்ளனவு மிந்நகர்க்கண் உள்ளவென
இந்நகர்க்கண் இல்பொருள்க ளில்லையெனப்—பன்ன
வளமலிந்த காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தான்
தளமலிந்த ஆரணிவேந் தன். (76)

பாக்க மிரண்டினடுப் பார்புகழும் பல்பொருள்கள்
தேக்குநா ளங்காடி சேர்ந்திருக்கும் —ஆக்கமுயர்
அம்மறுகின் சோலை அலர்மரங்க ளேதூணாச்
செம்மைபெற நிற்கும் சிறந்து. (77)

## அரசியல்.

சோமவெழில் வெண்குடைக்கீழ்த் தொல்லுலகெல் லாங்குளிர
மாமனுவின் நூன்முறையே மக்களெலாஞ் —சேமமுற
அன்று கரிகாலன் அறநெறியைச் செய்ததனுள்
ஒன்றுரைப்பாம் நாமிங் குவந்து. (78)

ஒருநா ளிருவர் ஒருவழக்கைத் தீர்க்கத்
திருமா வளவனிடஞ் செல்வான்—வருவோர்கள்
சென்னி இளமை தெரிந்தார் உடன்மீண்டார்
மன்னன் வலியறியார் மற்று. (79)

இன்னதனைக் கண்ட எழில்வேற் கரிகாலன்
அன்னவரைத் தன்பா லழைப்பித்துப்—பன்னுவீர்
என்பால் வழக்கை இயம்பாத தென்னென்றான்
அன்பா லவர்புகல்வா ராங்கு. (80)

புனனாட நீதி புகல்கின்ற வேந்தர்
மனுநாடி நல்லறிவு வாய்ந்து—முனநாடி
உற்றார் செயலை உளத்தினாற் கண்டறிந்து
முற்றாயு நுட்பம் முதிர்ந்து. (81)

உள்ளத்தைத் தூக்கின் உறுநா நிலையாக்கிக்
கள்ளக்கா மாதிகளின் கட்டறுத்துத்—தெள்ளியராய்
மூத்தடங்கிக் கால முழுதறிந்து சொல்வார்சொல்
பாத்தறியும் பண்பினரென் பார். (82)

மாண்ட குணங்களெலாம் வாய்ந்தும் அனுபவத்தின்
ஆண்டில் அறச்சிறியை ஆனதினால்—ஈண்டெமக்கு
நீநீதி ஓர்ந்து நிகழ்த்துமா றென்னென்றார்
தாநீதி கொள்ளவந் தார். (83)

சொற்றவர்தம் உள்ளம்போற் சூழ நரைத்தவொரு
கற்றவனை நீதிசொலக் கற்பித்து—மற்றிவரை
நாளைநீர் வந்திவன்பால் ஞாயம் பெறுமினென்றான்
வாளைநீர் நாட்டுவள வன். (84)

கொற்றவன் முன்பே குறித்த முதியவன்போல்
உற்று மறுநாள் உருக்கரந்து—முற்றும்
நரைமுடித்தங் கைங்குழுவோர் நாப்பண் இருந்தும்
உரைமுடிப்பாஞ் சொன்மினென்றான் ஓர்ந்து. (85)

இருவா தியரும் எடுத்த வழக்கை
ஒருவா தெதிர்நின் றுரைத்தார்—திருவாரும்
மன்னர்கோன் அன்னோர் வழக்கிலுறும் உண்மையெலாம்
நன்னர் அறிந்தான் நயந்து. (86)

எள்ளின்காய் ஈர்ந்த இயல்பென்ன ஆண்டிருந்தோர்
உள்ளம் வியப்ப உறுவழக்கை—உள்ளபடி
தோற்றுனும் நெஞ்சுவப்பச் சொற்றான் ஒருமுடிவு
மாற்றாரும் போற்றிடுமம் மன். (87)

முதியோன்சொல் தீர்ப்பின் பொழிகண்டே யாரும்
துதிகூறி அன்னவனைச் சூழக்—கதுமெனவே
பூண்ட முதுவேடம் போக்கிக் கரிகால
ஆண்டகையா நின்றான் அவன். (88)

உரைமுடிவு காணான் இளமையோன் என்னும்
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். (89)

என்று புகழ்ந்தார் இவன்பால் வழக்குரைத்தோர்
நன்றுறுமா ஆசி நவின்றார்கள்—மன்றிலுளோர்
கோமாறி லாதவியல் கொற்றவன்மேல் மற்றமரர்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. (90)

முற்றிற்று.

உ

## பொற்கைப் பாண்டியன் கதைச் சுருக்கம்.

முத்தமிழ்த் தாய் தோன்று முதனாடாகிய பாண்டிய நாடு, நீர் நில வளங்கள் பொருந்தியது. முச்சங்கங்கள் நிலை பெற்றதும், சிவபெருமான் அடியார்க்காக அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இயற்றியருளியதும், பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை என்னும் பதியிலே ஆம். இப்பதியில் முறைதவறாது பல பாண்டியர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களில் குலசேகரன் என்பவன் ஒருவன். அவன் மாறுவேடம் பூண்டு ஒவ்வொரு நாள் இரவிலும் நகர் சுற்றிவந்து, தன்னகர் மக்களின் தேவைகளை இரகசியமாய் அறிந்து அவர்கட்கு வேண்டுவன புரிந்து வந்தான்.

ஒருநாளிரவு, மதுரையம்பதியில் வதிந்த கீரந்தை என்னும் வேதியன், தான் காசியாத்திரை செல்லக்கருதி அதைத் தன் மனைவிக்குத் தெரிவித்தான். அதைக் கேட்டதும், அவள் அந்நகரில் தனித்து இருக்கக் கலங்கி நின்றாள். அப்போது அந்தணன், 'பெண்ணே! இம் மதுரையில் நீ தனித்திருத்தற்கு அஞ்சற்க. ஏனெனில், இது பாண்டிய மன்னரின் பழுதற்ற செங்கோலின்கீழ் அமைந்திருக்கிறது. பாண்டியர் மன்னுயிரைத் தன்னுயிர்போற் காப்பவர். ஆதலின் நீ அமைதியுற்று அமைக.' என்று அவளைத் தேற்றினான். அவன் மறுநாட்காலை வாரணாசிக்குப் பிரயாணமானான்.

அவ்வந்தணன் தன் மனைவியோடு பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் இரவில் நகர்சோதனைக்காக வந்த குலசேகர பாண்டியன் காதில் விழுந்தன. ஆதலின் அவன் ஒவ்வொரு இரவும் அப் பார்ப்பனிக்குக் கேடுவாராமற் காத்து வருவானாயினன். சில வருஷங்கள் சென்றபிறகு, ஒருநாள் அரசன் நகர் சோதனை புரிந்து வருகையில், அவ்வந்தணன் அகத்தில் ஏதோ ஆடவர் அரவங்கேட்டுச் சந்தேகப்பட்டுக் கதவைத் தட்டினன். 'யார் தட்டுவது?' என்று அதிகாரத்துடன்

ஒரு அரவம் அரசன் காதிற்பட்டது. அக்குரலால் உள்ளிருந்தவன் அந்தணான் என்று அரசன் அறிந்தான். உடனே அரசன் அவ்வந்தணனுக்குத் தன்மனைவிமீது வீண் சந்தேகம் உண்டாகாவண்ணம், ஒரு யுத்திசெய்து எல்லார் வீட்டுக் கதவையும் அங்ஙனமே புடைத்துவிட்டுத் தன்னரண்மனை சேர்ந்தான்.

மறுநாட் காலையில், அந்தணாளர் ஒன்றுகூடி, 'இரவில் ஒரு கள்வன், வீடுதோறும் வந்து நித்திரை சோதித்துச் சென்றான்' என்று அரசன் சபையில் முறையிட்டுக் கொண்டனர். உடனே அரசன், 'நல்லது அக்கள்வனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?' எனத் தன்னமைச்சரை நோக்கி வினவ, அவர்கள், 'கதவைத் தட்டியவன் கரத்தினைக் களைந்தே விட வேண்டும்' என்றனர். அரசன் சிறிதும் தாமதியாமல், 'யானே அக் கள்வன்' எனக் கூறி, வாளை உருவித் தன் கையைக் குறைத்துவிட்டு, 'என் அன்பர்களே! கீரந்தை காசிக்குச் செல்லுகையில், தன் காதலிபால் சொல்லியதைக் கேட்டிருந்தேனாதலின், ஒவ்வொரு நாளும் மாறுவேடம் தரித்து நகர் சோதனை செய்கையில், அவன் இல்லத்தையும் உற்று நோக்கிவந்தேன். நேற்றிரவு ஆடவன் அரவம் அங்குக் கேட்டதால், ஐயுற்றுக் கதவைத் தட்டினேன். அந்த ஆடவன் அவ்வீட்டுக்குடையவனென அவனுடைய குரலால் அறிந்த யான், தன் மனைவிமீது அவன் ஐயுறா வண்ணம் எல்லார் வீட்டுக் கதவையும் அங்ஙனமே புடைத்து வந்தேன். அது தவறென மதியமைச்சர் மொழிந்தமையின்; குறைசெய்த கையைக் குறைத்தேன்' என்றான்.

அவ்வேந்தனது அறநெறியைக் கண்ட சிவபெருமான் அவனுக்குக் காட்சிகொடுத்தருளி, 'நீதியைப் பேணுமாறு கை குறைத்த காவல! உன்கை பொற்கை ஆகுக', என்றருள் புரிந்தார். அக்கணமே அவனுக்குப் பொற்கை தோன்றிற்று. அவ்வரம் பெற்ற மன்னவன், நீண்டகாலம் முறைப்படி செங்கோல் ஓச்சி வாழ்ந்திருந்தனன்.

௨

# II. பொற்கைப் பாண்டியன் வெண்பா.

## காப்பு.

பொற்கையான் மாறன் புகழ்பெருகு நீதிசொலும்
நற்கதையை வெண்பாவா னான்பாட—அற்புடனே
எத்திக்கும் போற்றும் எழின்மதுரை மாநகர்வாழ்
சித்திக்க ணேசவருள் செய். (1)

## நாடு.

முத்தமிழ்த்தாய் தோன்று முதனுடு முச்சங்கம்
இத்தரையி லோங்கு மெழினுடு—அத்தனணி
மாமதியின் வம்மிசத்து மன்னர் வளநாடு
நாமியம்பும் பாண்டியநன் னுடு. (2)

காதலர்கள் ஊடும்வேற் கண்ணூர் மதிவதன
மீது மரைமலரை விட்டெறியத்—தாதவிழச்
செம்மலரான் ஞாவதனம் சேராது பாதமுறும்
அம்முகத்துக் கொப்பிலையென் றுங்கு. (3)

சேடனையே மானுவர்தங் தெள்ளறிவால் நல்லெழிலால்
வேடனையே போன்று விளங்குவரங்—நாடுறைவோர்
பொன்னிதியாற் பிங்கலனே போல்வர் கடப்பாட்டால்
தன்னிகரில் காரொப்பார் தாம். (4)

## ஆறு.

சம்பந்தப் பெம்மான் தகவழிந்த பின்சமண
வெம்பந்த மாந்தருடன் வேறுபட்டே—நம்பனருள்
ஆட்சியுற் றுய்த்த வரும்பா வெதிர்ந்துசெலும்
மாட்சியுறும் வேக வதி. (5)

இத்தகைநற் பேறடையா எந்நதியுஞ் சென்றடைய
நத்துகின்ற வார்கலியை நண்ணேன்யான்—சத்தியமே
என்றுரைக்குந் தன்மைபோல் என்றுமவ் வேகவதி
சென்றுகடல் சேர்தலிலை தேர்ந்து. (6)

இன்னல் புரிவோர்க்கு மின்னலஞ்செய் நல்லோர்போல்
தன்னை யெதிர்ந்தணைகொள் தன்மையர்க்கு—நன்னீரை
வேண்டு மளவளிக்கு மேன்மைப் பொருநையெனும்
பாண்டி நதி கொண்டிடுநற் பண்பு. (7)

## மலை.

ஆரமுதம் போன்ற அருந்தமிழை யன்றீந்த
ஆரணவல் லாண்மை அகத்தியனார்—ஆரும்
பொதிகையெனும் பேர்கொள் பொருப்பே எவர்க்குங்
கெதிதருமந் நாட்டின் கிரி. (8)

அக்கிரியி னின்றுகமழ் ஆரத்தின் நன்மணமும்
தக்கசீர்த் தண்டமிழின் தன்மணமும்—ஒக்கவே
கொண்டுதென்றல் மேவிடலாற் கூத்தன் திருநடனம்
கொண்டதுதென் திக்கைக் குறித்து. (9)

## நகர்.

கங்கைவாழ் வேணிக் கடவுளும் வள்ளிப்பேர்
மங்கைசேர் வேலவனும் வண்கலைதேர்—நங்கையே
அன்னபுல வோருமிருந் தாய்தமிழ்ச்சங் கந்தழைக்கும்
பன்னரிய கூடற் பதி. (10)

அரியவிளை யாடல் அறுபான்நான் குந்தான்
புரியவெம் பெம்மான்முன் போந்த—புரியிதுவால்
இப்பெருமை பேவு மெழிலார் திருநகரம்
எப்புவியி லேனு மிலை. (11)

வானிமிருஞ் சோலைகளும் வண்ணமிகு கார்த்திரளும்
பானு வினைமறைக்கும் பண்பதுதான்—பானுவே
அண்ணலெம் மன்குலத்துக் காதி மதிமுன்னர்
நண்ணலெனற் போலாகு நன்கு. (12)

காவிரிப்பூம் பட்டினத்துக் காசறுசீர் மாவணிகன்
கோவலன்ற னின்னுயிரைக் கொண்டதனால்—தாவில்சீர்த்
தன்னுயிரை நீத்த தராதிபன்போன் றூர்பல்லோர்
மன்னுபதி ஈதா மதி. (13)

## நூல்.

இந்நகரை ஆண்ட இனியகுல சேகரமன்
தன்னயமெண் ணாதபெருந் தன்மையனா—யந்நாளின்
மாறுவே டந்தரித்து மாமறுகெல் லாமிரவில்
தேறுகா வல்புரிவன் தேர்ந்து. (14)

அந்தணர்வாழ் வீதி அவனொருகாற் செல்லுங்கால்
நிந்தைதவி ரம்மன்ன னேர்கேட்ப—நந்தவிலாக்
கீரந்தை வேதியன்றன் னில்லக் கிழத்தியையந்
நேரந்த வந்துரைப்பான் நேர்ந்து. (15)

கண்மணியே காதலியே காசிப் பதிக்கேக
எண்ணியுளே னுளே னெனக்குநீ—நண்ணிவிடை
ஈந்திடுதி செல்கின்றேன் ஈரைந்தாண் டெல்லைதனிற்
போந்திடுவ னென்றான் புரிந்து. (16)

கொண்டா னுரைத்த மொழிகேட்ட கோற்றொடிதன்
வண்டா மரைக்கணீர் வார்ந்தொழுகப்—பெண்டொருத்தி
உற்றகண வற்பிரிந்திங் கொன்றியா வுற்றிடுதல்
குற்றமன்றோ கூறுகென்றாள் கூர்ந்து. (17)

செப்புவனவ் வந்தணனுஞ் செந்திருவே காசிசெலல்
இப்புவியில் யாவர்க்கு மெளிதன்றே—துப்பிதழாய்
நன்றுனது மாற்றம் நளிர்க்கங்கை நீராடல்
என்றெனக்குக் கிட்டு மினி. (18)

சொல்லியவச் சொற்கேட்டுச் சொல்லுவாள் கற்பொழுக்கின்
நல்லியலைக் காட்டவந்த நங்கையவள்—வல்லாய்
வனக்கங்கை யாடி வருமளவு மைய
எனக்கிங்குக் காவல் எவர். (19)

குலசே கரன்செங்கோல் கோடாவிவ் வூரில்
மலைவேன் தனிவாழ மங்காய்—கலையுணர்ந்தோர்
பேதமைமா தர்க்கணியாப் பேசிடுவ ரோர்விதத்தில்
ஈதமையு நின்ற னிடம். (20)

உத்தமரில் நங்கோவை ஒப்பா ரொருவருண்டோ
இத்தலத்தி லென்றுலகோ ரெம்மருங்கும்—நித்தநனி
போற்றிடுதல் கேட்டிலையோ பொன்னே நினதச்சம்
மாற்றிடுதி வாழி மகிழ்ந்து. (21)

அன்றியும் பெண்கட் கருங்கலமென் றோதுகற்பாம்
ஒன்றிருக்க மற்றென்னை உன்னுவது—துன்று
சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. (22)

அந்தணன்சொல் யாவு மவனில்லாள் கேட்டுரைப்பாள்
நிந்தை தவிர்ந்த நெடியோய்நின்—சிந்தை
இடங்கொண்டு வாழுமென்னை பெண்ணுதிநீ எய்தும்
இடங்களி லெல்லாம் இனிது. (23)

கூறிய நாளிற் குறுகிலையேல் இச்சடலம்
நீறுபடும் ஐயமிது நிச்சயமே—தேறுதிநீ
நின்பொருட்டால் இவ்வுடலை நீயிங்க னெய்துவரை
அன்பொடியான் போற்றிடுவ னால். (24)

ஓதியநாள் செல்லுமுனர் உற்றிடுவ னிந்நகரிற்
கோதிலாய் வாழ்கவெனக் கூறியே—பூதலத்தோர்
பாதகமெல் லாம்போக்கும் பாகீ ரதியாட
வேதியன்சென் றிட்டான் விரைந்து. (25)

மறையோன் துணிந்து வழுத்தியசொற் கேட்ட
இறையோன்றன் நன்னகரை யென்றுங்—குறைவின்றிக்
காத்துவரல் போன்மறையோன் காதலியின் இல்லினையும்
காத்துவர லானன் களித்து. (26)

ஆண்டு சிலசெல்ல அந்தணன்றான் காசியினில்
வேண்டுவன செய்துமனை மேவியே—ஆண்டுவந்து
வேய்வந்த தோளி வியக்க விரித்துரைத்தான்
போய்வந்த வாறு புரிந்து. (27)

அன்றிரவு மம்மன்னன் அம்மறையோன் வாயிலிலே
சென்றுவா யிற்காவல் செய்திடுவோன்—துன்றியவே
ருடவன் பேசு மரவங்கேட் டுண்ணோந்து
நாடினனங் குண்மையினை நன்கு. (28)

இற்குரியோ னில்லாத இம்மனையி லிப்பொழுதிப்
பொற்கொடியி னேடு புகல்கின்ற—மற்றிவன்யார்
வேற்றுளோ காசிசென்ற வேதியனே என்றயிர்த்தான்
மாற்றூர்க்குக் கூற்றுகு மன். (29)

என்னுணை வய்ந்திடலா லன்றோ எழின்மறையோன்
தன்னில்லா டன்னைத் தனிவிடுத்—தென்னுதவி
எண்ணியே காசியுற்றுன் என்செய்கேன் மற்றிங்கு
நண்ணியவ னேதிலனேல் நான். (30)

எனப்பலவு மெண்ணி எழுமைய நீங்கப்
புனைக்கதவங் கையாற் புடைத்தான்—மனைக்குரிய
சிட்டன் மிகச்சினந்து செம்மையறு மிச்செயல்செய்
துட்டனெவன் என்றுன் துணிந்து. (31)

எனவறைந்தோன் பூதேவன் என்றுணர்ந்த மன்னன்
துனியுற்ற தன்செயலாற் சோர்ந்தே—மனையடைந்த
அந்தணன்றன் இல்லவண்மே லையுறுமே என்றெண்ணிச்
சிந்தைதளர் வுற்றுன் திகைத்து. (32)

ஒல்லாத செய்கையா னென்றும் புரிந்ததிலை
பொல்லாத வேளை போலுமிதே—எல்லோர்
கதவும் புடைப்பினிது கள்வர்செய லென்ன
இதயத் துணர்வா னிவன். (33)

இதுதான் சரியென் றிறையவன்இற் றேறுங்
கதவம் புடைத்தசெயல் கண்ட—விதியறிந்த
வேதியர்கள் மெய்ந்நடுங்கி வீதியெல்லாங் கூவினர்யாம்
ஏதுசெய்வோம் ஏதுசெய்வோ மென்று. (34)

உள்ள நடுங்க உடனடுங்க வேர்வைநீர்
வெள்ளமென ஓடவவ் வேதியர்தம்—உள்ளத்தை
நண்ணு குறை கூறுவான் நல்வேந்தன் பேரவைக்கண்
திண்ணமுடன் சென்றார் திரண்டு. (35)

ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருள்சால் பாண்டிப் பெருமானே—ஆரமுதம்
உண்டவர்க்கு முண்டோ உறுபசிதான் நின்னாட்சி
கொண்டவர்க்கு முண்டோ குறை. (36)

சந்திர வம்மிசத்துத் தார்வேந்தே எய்துபயம்
ஐந்தினையுந் தீர்ந்தரசாள் அண்ணலே—முந்திரவில்
எத்த னொருதிருட னெங்கள் கதவிடித்தான்
நித்திரைசோ திக்க நினைந்து. (37)

இத்தகைய செய்கை இதுகாறு நின்னாட்டில்
நித்த்மொளிர் செம்மால் நிகழ்ந்ததில்லை—அத்தகைய
தீது புரிந்த திருடன் றனைத்தேர்ந்தே
நீதி புரிந்தருள்க நீ. (38)

அரசன் றுயில்கையிலு மன்னோனென்றன் ஆணை
பரவ வுலகிலுளோர் பார்ப்பார்—விரவுபுகழ்
நின்னுடைய ஆணைக்கு நேற்றிரவு நித்திரையோ
மன்னவனே என்றுரைத்தார் மற்று. (39)

தூமறையோ ரிவ்வண்ணஞ் சொல்லுதலுந் தொல்லாண்மை
மர்மதியின் வம்சம் வருவேந்தன்—தீமையுற்
இவ்வினையைச் செய்தவனை ஏற்றவிதம் யாதென்றுரைப்பல்
எவ்வமிலீர் என்றா னிசைந்து. (40)

அங்கே யிருந்த வமைச்சர் முகம்நோக்கி
இங்கிவர்சொல் குற்ற மியற்றினவர்—பங்கமுறத்
தண்டனையென் றந்திடலாஞ் சாற்றிடுமின் என்றுரைத்தான்
விண்டுவையே ஒத்திடுமவ் வேந்து. (41)

மற்புயத்தான் சொல்லை மனுமுறைமை தேர்ந்தொழுகும்
அற்புதத்தார் கேட்டங் கறைகுவார்—இற்புதவம்
தட்டியவன் றன்கரத்தைத் தாழா திரண்டுபட
வெட்டி விடலே விதி. (42)

எனக்கூறக் கேட்ட இறையவனப் போதே
தனக்குக் கரியாவான் தானே—நினைத்துமுனம்
ஊனஞ்செய் தானேபோல் ஓர்கை குறைத்தான்செங்
கோனடத்துந் தென்மதுரைக் கோன். (43)

மட்டுடைய கற்பகத்தார் வானவர்கோன் மாமகுடம்
பட்டுடைய முன்னம் பருவளையை—விட்டெறிந்த
கையையோ கார்பிணித்த கையையோ கண்டித்தாய்
ஐயையோ என்ற தவை. (44)

மதிமந் திரிமறையோர் மற்றோர்கள் ஆஆ
சதியிதுதான் என்னென்று சாற்றித்—துதியமரும்
அண்ணலே என்செய்தாய் ஐயகோ வென்றலறி
மண்ணிலே வீழ்ந்தார் மருண்டு. (45)

வீழ்ந்தோ ரெழுந்தந்த வேந்தன் றிருமுன்னர்த்
தாழ்ந்துரைத்தார் புல்லறிவேம் சாற்றரிய—பாழ்புரிந்தேம்
தீமையே செய்தாய்போற் செங்கைகுறைத் தாயிதென்
யாமறியச் சொல்க இவண். (46)

இன்னமொழிந் தாரை எதிர்நோக்கி என்னாவி
அன்னவவை யீரின் றறைந்திட்ட—இன்னல்
புரிந்திட்டேன் யானேயப் புன்செய்கை செய்கை
அரிந்திட்டே னென்றா னரசு. (47)

ஒன்று முணரா துளமயங்கி ஓவியம்போல்
நின்றாரை நோக்கி நிகழ்த்துவான்—என்றனிரு
கண்ணனைய நல்லீர்யான் கைகுறைத்த காரணத்தை
உண்ணினையச் சொல்வ னுமக்கு. (48)

அரசன்செங் கோல்காக்கு மஞ்சேனீ என்ன
உரவன்கீ ரந்தை உரைத்துக்—கரிசகல்தன்
நன்மனைவி யிற்பிரிந்த நாண்முதலா நானவடன்
நன்மனைக்கா வல்புரிந்தேன் நன்கு. (49)

காசியுற்று மீண்டேதன் காதலியி னோடுநென்னல்
பேசியவன் கீரந்தைப் போராளப்—பூசுரனே
என்றறியா தேதிலனென் றெண்ணிக் கதவிடித்தேன்
நன்றறிய உண்மையினை நான். (50)

ஐயந் தெளிந்தேனவ் வந்தணன்றன் இல்லவள்மீ
தையமுறா வண்ண மகந்தொறும்யான்—வெய்யபுன்மைக்
கள்வனென யாரும் கருதக் கதவிடித்தேன்
தெள்ளறிவில் லாதேன் திகைத்து. (51)

நன்னகரெல் லாந்துங்கு நள்ளிரவில் நான்மறையும்
பன்னு பனவர் பதைத்திடவே -- மன்னுதயர்
சார விழைத்த தவற்றிற்கா என்றன்கை
தீரக் குறைத்தேன் தெளிந்து. (52)

இவ்வண்ணம் வேந்தன் இயம்ப வெழில்வாய்ந்த
செவ்வண்ண மேனிச் சிவபெருமான்—மெய்வண்ணம்
பேணத்தன் கைகுறைத்த பேரரசன் கண்குளிரக்
காணவெழுந் திட்டான் களித்து. (53)

துலைநேர்ந்த கோமானும் தோன்றலைத்தன் தேர்க்கீழ்க்
கொலைநேர்ந்த கோமானு மன்றித்—தலைமீது
நிற்கிணையார் என்று நிமலனீ வெட்டியகை
பொற்கையா கென்றான் புரிந்து. (54)

கொற்கையான் மாறன் குலசேக ரப்பெருமான்
பொற்கையான் ஆகிப் பொலிந்திட்டான் — நற்கருணைக்
காமாரி செய்கருணை கண்ட கடவுள்குழாம்
பூமாரி பெய்த புகழ்ந்து. (55)

வானமும் மாரி வழங்க மனுவோங்க
ஞானமுதற் செல்வமெலாம் நன்றோங்கக்— கோனவன்றான்
தாசரதி என்னத் தரணிமுழு தாண்டான்
தேசநனி போற்றத் திகழ்ந்து. (56)

முற்றிற்று.

# III மனுச்சோழன் வெண்பா.

காப்பு.

தன்னருமை ஓர்மகன்றேர்ச் சக்கரத்தின் கீழுறவே
பன்னரிய நீதி பகுத்துரைத்த—மன்னவன்றன்
துங்கமிகு நற்சரிதை சொல்லுதற்குச் சங்கரன்சேய்
ஐங்கரன்றாள் ஆமிங் கரண். (1)

நாடு.

காமருவு பொன்னிபல கால்களொடு சென்றுமலர்
மீமருவு சோலையிலும் மேன்மைசேர்—தேமருவு
வாழைமரக் காவினிலும் வந்துலவு நன்னாடு
சோழவள நாடென்றே சொல். (2)

செந்தா மரைத்தேனும் செங்கழுநீர்ச் செந்தேனும்
நந்தாக் கதலி நறுந்தேனும்—கொந்தாரும்
சோலைதரு பைந்தேனும் சூழ்கடலிற் சேர்ந்தந்த
வேலையுவர் போக்கிடுமால் மிக்கு. (3)

சோறுடைய நாடென்றும் சோணாடே யென்னுமுரைக்
கூறுடைய இந்நாட்டிற் கூர்மதியின்—தேறுடைய
முத்தமிழின் பாவலரும் மூதுலகாள் காவலரும்
நத்திடவே வாழ்ந்திடுவர் நன்கு. (4)

வான்குதிக்குங் காடுகளில் வானரங்கள் தாங்குதிக்கும்
மான்குதிக்கும் நான்குதிக்கும் வண்ணமுற—மீன்குதிக்கும்
வாவிதொறும் இன்னபெரு மாநீர் வளநாடு
காவிரிநன் நாடெனவே காண். (5)

## நகர்.

மாவாருஞ் சோலைகளும் வண்டாரும் வாவிகளுந்
தேவாரங் கூறுந் திருப்பதியும்—மேலூர்
மருவாரும் போற்றும் வளவன்கோல் கோடாத்
திருவாரூர் ஆகுமெனத் தேர். (6)

வன்றொண்டர் என்றே வழங்கலுறும் சுந்தரராம்
இன்றொண்டர் மேவு மெழினகரும்—நன்றென்றிப்
புற்றுறையும் ஈசனார் பொற்கோவில் சேர்நகரும்
நற்றிருவார் ஊரெனவே நாட்டு. (7)

கல்லே கடினமுறும் காற்றே அலைதலுறும்
நெல்லே இடிபடுமந் நெற்கதிரே—ஒல்லை
படுவபோர், பொய்யே படுவபொய், பாலே
அடுபவூர் எம்மருங்கு மாங்கு. (8)

அலைபடுவ தண்முத்தின் ஆரமே யாண்டும்
கொலைபடுவ வாழைக் குலையே—நிலைபுரளும்
போதே அழிபடுவ பூம்புனலே அந்நகரின்
மீதே சிறைபடுவ மிக்கு. (9)

## நூல்.

முன்னொருகால் ஆரூராம் மூதூரில் ஆண்மைமிகு
மன்னெனவே ஆண்ட மனுச்சோழன்—பன்னருசீர்
மேனிலத்தா ரும்போற்றும் மேன்மை மனுமுறையை
நானிலத்தி னாட்டினான் நன்கு. (10)

மன்னறந்தான் தன்னுருவம் மன்னனுரு வாக்கொண்ட
தென்னவறைந் தெவ்வுலகும் ஏற்றிடுசீர்ச்-சொன்னிறைந்தான்
மாண்பலவும் கூறும் வகையறியேன் ஆயினுஞ்சொற்
பூண்புலவர் கொள்வர் பொறுத்து. (11)

மன்னுயிரோ தன்னுயிரா வாய்ந்திருந்தான் மானிடர்க்குத்
துன்னுமிடர் ஐந்தும் துடைத்தனனால் —இன்னமனன்
ஓங்குநாடு நன்னிலைக்கே ஓது துலாக்கோலும்
ஈங்குவமை இல்லெனவே எண். (12)

சாத்திரங்கள் யாவையுமே சாலவறி நல்லமைச்சும்
பாத்திறங்கள் சால்புலமைப் பாவலரும்—தீத்திறங்கள்
சற்றெனினும் சாராத சால்பினரும் மன்னவைக்கண்
உற்றணியைச் செய்வார் உவந்து. (13)

எண்ணரிய மாண்புடைய எம்மன்ன ரும்மிவன்போல்
நண்ணரிய வண்மை நனிஇலரென்—றெண்ணுமிவன்
புத்திரப்பே றின்றிமனம் புண்ணுனன் இத்தகையாற்
கித்தரையில் என்னுண்டாம் இன்பு. (14)

புத்திரரைத் தாமடையார் பொன்றுத நற்கதியும்
மித்திரரைத் தாமடையார் மேதினியில்—நித்தியமாய்
இன்னுற்று வாழ்ந்திடலும் இன்றும் எனச்சான்றோர்
பன்னுற்ற தோர்ந்தான் பரிந்து. (15)

மானிடரில் மக்களெனும் மாண்பொருளில் வாழ்வென்றும்
தானிடரில் உய்க்கும் தகைமைத்தால்—மானவர்க்கு
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுமவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (16)

தொல்லையுறு செல்வமெலாம் துய்த்திடினும் இவ்வுலகோர்
எல்லையறு கீர்த்தி இசைந்திடினும்—மெல்லவூறும்
கோதிலா மக்களிலார் கொள்ளார் கதியென்னுந்
தீதிலாச் சொல்லதனைத் தேர்ந்து. (17)

தனதரிய ஊழ்நொந்தான் தற்பரனா ரூரன்
மனதறிந்தே என்குறையை மாற்றும்—எனவறிந்தே
எத்தினமு மன்னவன்றாள் ஏத்தினான் ஏழைமையால்
நத்தினர்போற் செல்வர்களை நன்கு. (18)

எங்குமறச் சாலைவைத்தான் எம்மருங்கும் வாவிதொட்டான்
பங்கமறத் தானங்கள் பாத்தளித்தான்—எங்குமுயர்
கல்விகற்குஞ் சாலைகளைக் கட்டுவித்தான் ஆசிரியர்
சொல்விரதம் பூண்டான் தொடர்ந்து. (19)

எப்பெருமான் ஆரூரன் இன்னடியார்க் கேதுதுயர்
வம்பவிழ்தார்ச் சோழன்றன் வாண்மனைவி—உம்பரெலாம்
போற்றுமுயர் நன்மகவைப் பூண்டகரு வின்பயனாத்
தோற்றுவித்தாள் விண்டாள் துயர். (20)

பன்னரிய காலம் பருவரலில் ஆழ்ந்திருந்த
மன்னனிடம் சொன்னார் மகப்பேற்றைச்—சொன்னவர்க்குத்
தூசளித்தான் காசளித்தான் தூயமகப் பேறடையா
ஆசழித்தான் ஈசனென வாங்கு. (21)

ஆடினான் ஈசன் அருளாம் பெருக்கதனைப்
பாடினான் இன்பப் பரவையிலே—ஆடினான்
பாவலர்கள் ஏவலர்கள் பாணர் பொருள்பெறுக
ஆவலொழிகவென்றா னன்று. (22)

வளக்கினிய நாட்டவரும் மற்றுமுள் ளாரும்
உளக்கனிவின் ஆண்டான் டுவந்திங்—களக்கும்
திறையிறையும் வேண்டுகிலேன் தேசத்தே யாண்டு
நிறைவரையும் என்றான் நெகிழ்ந்து. (23)

ஆரூரெம் பெம்மான் அருளாற் பிறந்தவனும்
ஏரூர்தன் கண்ணனுக்கு பின்மகற்குச்—சீரூரும்
வீதி விடங்க னெனுநாமம் வேதமுறை
ஓதியமைத் தானரசன் ஓர்ந்து. (24)

நாளொரு மேனியென நாழிகையோர் வண்ணமெனக்
கோளொரு போதிலுமே கொள்ளானு—வாளனைய
பூவாளி ஏவுமெழிற் புத்தேளே போல்வளர்ந்தான்
பாவாளர் போற்றப் பரிந்து. (25)

எப்பருவத் தெக்கருமம் எம்முறையின் ஏற்பதுவோ
அப்பருவத் தக்கருமம் ஆற்றியே—ஒப்பரிய
காவிரிபாய் நன்னாடன் கான்முளையைப் போற்றினனால்
மேவரிய வெற்றியினால் மேல். (26)

அன்புபொறை ஊக்கம் அரியவொழுக் காசாரம்
இன்புநிறை வாய்மையுடன் இன்சொல்லும்—நன்கமைந்தே
அன்னையுடன் றாதை அறியு முதற்றேவர்
என்னுமுறை யோர்ந்தா னிவன். (27)

தந்தை பெருங்குணங்கள் சார்மகவுங் கொள்ளுமென்னும்
முந்தை யுரைமெய் மொழியன்றோ—சிந்தை
இடனொன்ற ஈசன் இணைத்தாளை வைத்தான்
மடனென்று மாற்ற மகன். (28)

நல்லாரின் கேண்மையனு நாடோறு மேன்மையுறுப்
பொல்லாரின் நட்பைப் பொருந்தானுச்—சொல்லாரும்
பூததயை யாதி பொருவரிய நல்லியல்கள்
ஏதமற வாய்ந்தா னிவன். (29)

இளவரசாம் சீர்ப்பருவம் எய்திடுமவ் வேந்தல்
வளவரசாம் தந்தைபால் வந்தே—பளகறவே
மண்ணனைத்துங் காப்போய் மருவுமென்ற னுள்ளத்தே
எண்ணனைத்துங் கேட்டருள்க இன்று (30)

தோற்றமுதல் எல்லாத் தொழில்களையும் செய்பவனை
ஊற்றமிகு நற்றிருவா ரூரதனில்—வீற்றிருக்கும்
கோணவிளஞ் சந்திரனைக் கொன்றைபுனை வேணியனைக்
காணவருள் கென்றுன் களித்து. (31)

கேட்டனனம் மைந்தன் கிளத்துவன சீர்பரவ
ஆட்டினனங் கண்ணீரால் ஆகந்தம்—கூட்டினன்
உச்சி முகந்தான் உளநெகிழ்ந்தா னெய்தரிய
அச்சு தனைமார் பணைத்து. (32)

பிள்ளைக் கலிதீர்த்த பெம்மானை நங்குலத்தார்
உள்ளக் கவலை யொழிப்பவனை—அள்ளற்
கருங்கடலின் ஆரமுதைக் கண்ணிமையார்க் கீந்த
பெருங்கடலின் பேருளைப் பேண். (33)

புண்ணியம் ஈட்டுதற்குப் புத்திரனே நீபிறந்தாய்
நண்ணிய இப்பிறப்பில் நானுய்ந்தேன்—திண்ணிய
உன்னுள்ளம் நற்கருமத் தோங்கியதால் நன்மகனே.
என்னுள்ளம் பூரித்தேன் ஈங்கு. (34)

பூரணனைப் புண்ய புராதனனை எவ்வுயிர்க்கும்
காரணனைக் கண்டு களிகூர்ந்தே— ஆரணனங்
கீயும் வரங்களெலாம் ஏற்றினது மீள்கென்றான்
ஆயும் முறைதேர் அரசு (35)

பூவிலுறை புத்தேளும் பொன்னமரும் மார்பினனும்
காவிலுறை தேவுங் கடவுளரும்—மேவிடுசீர்ச்
சின்மயனைச் சேவித்தாற் சேருமோ தீவினைகள்
என்மகனே செல்கென்றான் ஈண்டு. (36)

தந்தைமொழி யைக்கேட்டுத் தாய்பாதம் தான்பணிந்தே
இந்நகர்க் கேவாழும் எம்மானைச்—சந்தப்
பிறையணியும் பெம்மானைப் பேணவருள் என்றான்
குறையகலும் எக்குணமும் கொண்டு. (37)

ஆன்றமொழி கூறும் அம்மகனைக் கண்டன்னை
ஈன்ற பொழுதின் இனிதுவந்தாள்—சான்ற
அருமகனை புற்றிடங்கொண் டானருளாற் பெற்ற
ஒருமகனே செல்கென்றாள் ஓர்ந்து. (38)

என்றாள் மலர்ப்பதத்தை ஏமமுறப் போற்றிசைத்தே
பேர்ன்றுப் புராந்தகனைப் போற்றிவரக்—குன்று
உழுவலன் புள்ள உளத்தெழிலார் சூழ
வழுவலன் சென்றான் மதித்து. (39)

மல்லிகையும் சண்பகமும் மந்தாரந் தும்பையுடன்
வில்லுவமும் கொன்றையினன் மென்மலரும்—முல்லையுந்தண்
மாலைகளாக் கோத்தொளிரும் மாணிக்க வெண்முத்து
மாலைகளோ டெய்த்தான் மகிழ்ந்து. (40)

ஆடையுட னாபரண மாதியவும் மாலயனும்
தேடரிய தேவனுக்குச் சேர்த்தனுப்பி—நாடுபுகழ்
ஆலயத்துச் செல்வோர் அடையு முறைப்படியே
சீலமுடன் சென்றானச் சேய். (41)

முற்றத் துறந்த முனிவரரும் நான்மறைகள்
கற்றுத் தெளிந்த கலைவலரும்—தெற்றெனவே
காணரிய கண்ணுதலைக் கண்டுவர வுன்னியவன்
மாணவிரும் தேரூர்ந்தான் மற்று. (42)

அன்ன பொழுதில் அரசரிளம் புத்திரரும்
மன்னு மதியமைச்சர் மைந்தர்களும்—பன்னு
மகுட வருத்தனரும் மண்டலிகர் யாரும்
பகடிவர்ந்தா ருள்ளம் பரிந்து. (43)

மாகதரும் வேதியரும் வந்தியரும் சோதிடரும்
பாகவதம் கூறுநரும் பார்புகழும்—வாகுவலி
மல்லர்களும் மாண்பமைந்த வண்டமிழின் நாற்கவியில்
வல்லவரும் சென்றார் வளைந்து. (44)

கட்டியங்கள் கூறுநரும் கண்காட்டி ஆடுநரும்
வட்டியங்கள் ஓச்சி மகிழுநரும்—கட்டியங்கள்
கொட்டிக் களிக்குநரும் கோலமார் வெண்முத்தின்
வட்டக் கவிகை வகுத்து. (45)

வந்தவரும் அட்டபெரு மங்கலங்கள் ஏந்திவரும்
சுந்தரரு எம்மருங்கும் தொக்கனரால்—இந்திரனும்
கொள்ளவரி தாகுமெனக் கூறும் பவனியிடை
எள்ளுமிட லாமோ இவண். (46)

வீதி விடங்கன் வியன்றேரின் மேற்கொண்டே
ஆதி விடங்கனமர் ஆலயத்தின்—வீதியிடம்
போதரலும் ஆவின் புனிற்றிளங்கன் றொன்றங்
கோதிரதக் கீழ்வீழ்ந்த துற்று. (47)

வேகமுற்றுச் செல்லும் வியன்றேர்க்கால் ஆன்கன்றின்
ஆகமுற்றுங் கீழாக்கி ஆருடலை—ஓகையற்று
ஆகுலத்தில் ஆழ அறைத்திடலும் சேய்வளவன்
சோகமுற்று வீழ்ந்தான் துவண்டு. (48)

எத்தனையோ மைந்தர் இறைமகன்றன் ஆணையினை
நத்தினராய்ச் சூழ்ந்து நடந்திட்டும்—மெத்துமிளங்
கன்றிரதக் கீழாகிக் காலனூர் கண்டதென்றால்
வென்றிடல் ஆமோ விதி. (49)

மலைபுரையும் தேரை மருங்கிருத்தி வேதக்
கலைநிறையும் சோணாடன் காளை—நிலைகுலைந்தான்
தேற்றினார் பக்கத்தார் செம்மலான் கன்றினிடம்
காற்றினேர் சென்றான் கடிது. (50)

ஆன்கன்றே உன்னை அருங்கொலையுள் ஆக்கியநான்
ஊன்கன்றிப் பட்டாலும் உய்வாயோ—மான்கன்றோர்
கையிரான் திருத்தளியைக் காணவந்தேற் கிப்பயனோ
கையான தென்றான் கதித்து. (51)

எண்ணலரும் முன்னாள் எழிற்புறவொன் றான்கலங்கி
நண்ணலரும் பூததபை நன்கமைந்த—தண்ணளியின்
என்குலத்து வேந்துசிபி இன்கரத்தில் வந்திடவே
தன்னலத்தைப் பேணான் தளர்ந்து. (52)

தானோர் துலைபுக்குத் தன்னுடலை ஈந்தருளி
வானோரும் போற்றுபுகழ் வாய்ந்தனனால்—யானோ
இளங்கன்றை மாய்த்திகழ்வை ஏற்றிங் கிருந்தேன்
உளங்கன்றி என்னோவென் னாழ். (53)

செப்பலரும் பல்பாவம் செய்தவர்க்கும் திண்புவியில்
ஒப்பலறு முய்வுண்டாம் ஓர்ந்துரைக்கில்—நற்புலவர்
போற்றுபசு வின்கன்றைப் பொன்றிடச்செய் புல்லேற்குச்
சாற்றுமோர் உய்வுண்டோ தான். (54)

குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம் பென்ன
நலத்துக் குலமழிக்க நாடும்—ஒலித்தலுறு
பாற்கடலிற் றோன்றும் படுவிடமே போன்றுதித்தேன்
நாற்கடல்சூ ழம்புவியில் நான். (55)

மதிக்குமோர் மாசென்றும் வாய்ந்திடல்போல் வையம்
துதிக்குமோர் பானுவுக்கும் சூழ்ந்து—கதிக்குமோர்
மாசுதனைத் தேடிவைத்தேன் மாபாவி நன்றிவண்யான்
தேசுதனைப் பெற்ற திறன். (56)

பாவி யினியிந்தப் பாவத்தை ஆற்றுவனோ
தாவிலுயிர் தாங்கிடுமோ தாய்ப்பசுவும்—மேவரிய
என்றந்தை இன்முகத்தை எவ்வண்ணம் யான்காண்பேன்
இன்றுயிரைப் போக்கிடுவன் ஈங்கு. (57)

இம்முறையே கூறி இரங்கிநிற்கும் மன்மகனைச்
செம்முறைசேர் அந்தணர்கள் சீரமைச்சர்—நன்முறையை
நோக்கி நடுவை நுவலுகின்றார் அன்னவன்றன்
போக்குமுயிர் காக்கப் புரிந்து. (58)

சோழகுல நற்துரிசில் சோகமேன் ஆன்கன்று
பாழுவலத் திக்கதியாற் பட்டதுவே—தாழலரும்
இப்பாவம் போக்குதற்கோர் ஏற்றகரு மம்புரிதல்
இப்பாரில் நன்றெனவே எண். (59)

இம்மொழியைக் கேட்ட இளவரசன் போந்தநெறி
செம்மைபெறு தேரைச் செலுத்தியே—செம்மொழியின்
சென்னி திருச்சமுகம் சென்றான் பரிசனங்கள்
துன்னியிட எம்மருங்கும் தொக்கு. (60)

குமரன்றான் ஏகியதும் கோவுந்தன் னுள்ளம்
அமரும் நலிவால் அயர்ந்தே—தமருடன்
நாகுதனைச் சூழ்ந்து நனிநோக்கி மெய்வருந்திச்
சோகமுற வீழ்ந்ததுவாற் சோர்ந்து. (61)

செத்துக் கிடக்கின்ற சேங்கன்றைக் கண்டபசு
கத்திச் சுழன்றே கடிதுநொந்து—முத்தியதை
மோந்துபெரு மூச்செறிந்து மூளுங் கனலுலைமேல்
காந்தரக்கின் உள்ளம் கனிந்து. (62)

மயங்கும் தெளியும் மறுமுறையும் மாழ்கி
உயங்கும் நெடுங்குரலிட் டோடித்—தியங்கிப்
பதைக்குஞ்சோர் கின்றதன் பைங்கண்ணீர் ஆற்றில்
மிதக்குங்கன் றோடு மெலிந்து. (63)

என்னன்பே உன்மேல் இரதக்கால் ஏறியிந்த
இன்னல் விளைத்ததுகொல் இத்துயருன்—இன்னுயிர்க்கக்
கெய்தியபோ தென்னநினைந் தெண்ணாத எண்ணியதோ
உய்திறன்கா ணாவுன் னுளம். (64)

முப்பொழுதும் முன்னி முழங்கி எனையடுத்த
எப்பொழுதும் பாலை யினித்தருத்தி—ஒப்பரிய
பொன்னைப்போ லுன்னைப் புரந்தேனே முகநோக்கி
என்னைப்பார்த் தன்னையென் றென். (65)

வாலுயர்த்தி வீசி வளைந்து மருள்விழித்துக்
காலுயர்த்திப் பாய்ந்து கடிதோடி—நாலுபெரும்
திக்காடி யோடிவரும் சேங்கன்றே உன்னுடல்
எக்காலங் காண்பேன் இனி. (66)

அம்மாவென் றென்னை அழைப்பவர்யா ரென்பாலைச்
சும்மா கமரிற் சொரிவேனோ—அம்மா
குறுகுதே ஆவி குழம்பிக் கொதித்து
மறுகுதே பெற்ற வயிறு. (67)

பீதநிற மேனியின்மேற் றேர்க்கால் பெயர்ந்தூர்ந்த
பாதகனை யான்பார்க்கப் பட்டாலப்—போதவனைக்
குத்திக் குளறிக் குடர்கொம்பிற் கொண்டெமனார்
தத்திவிழச் செய்யேனோ தான். (68)

அய்யோ அரனூர்க்கிங் காருமோ ஊரென்றல்
பொய்யோ அறக்கடவுள் போன்றியதோ—துய்யமனுச்
சோழன்கைக் கோலும் சுடுங்கோல் கடுங்கோலாய்த்
தாழங்கோல் ஆயதுவோ தான். (69)

பாவியினைச் சாராது பாக்கிய மென்பரென்றன்
ஆவியினை மானு மருங்கன்றே—தீவினையேன்
துக்கித்துச் சோர்ந்திடவே துன்பளித்துச் சென்றாயே
திக்குவே றொனக்குச் செப்பு. (70)

என்றுன்னி யக்கோ இருந்துயரின் மூழ்குற்றுத் [றும்
தன்கன்றைத் தன்றடலைப்பாற் றுன்மறைத்துத்—துன்போன்
என்னின்னல் போக்கிடுவான் இன்மனுவாம் சோழனென
முன்னினைந்து சென்றதுமன் முன். (71)

அருஞ்சூறை தன்னில் அகப்பட்டுச் சுற்றுந்
துரும்பாம் எனவே சுழன்று—வருந்துமிளம்
கன்றிழந்த ஆவின் கடுந்துயரம் இவ்வளவிற்
றென்றுரைத்தல் ஏலாதால் ஈண்டு. (72)

இன்னவிதம் ஏகியே ஈற்று மனுமுறைசேர்
மன்னன் கடைவாயில் வந்தெய்தி—மன்னும்
வளர்கோட்டால் ஆராய்ச்சி மாமணியை யாட்டித்
தளர்வறிவு றுத்ததுவே தான். (73)

மணிநாதம் காதுபுக வானிடியைக் கேட்ட
மணிநாகம் என்ன மருண்டார்—அணிநாதன்
என்னிகழ்ந்த தய்யகோ என்செய்வேன் யானென்று
தன்னினைவு சோர்ந்தான் தளர்ந்து. (74)

மூர்ச்சை தெளிந்தரசன் முன்வாயிற் சேருமுனம்
தேர்ச்சி யுடன்வாயிற் சேர்ந்தொருவன்—நேர்ச்சிபெறு
நெஞ்ச மழுங்க நிருபர்கோ கோவொன்று
துஞ்சுமணி தட்டியதே சூழ்ந்து. (75)

என்றுசொலு மாற்றம் எழிலரசன் றன்செவியில்
துன்று சிவையூடு சூடுற்றே—ஒன்றும்
இரும்பின் கொழுவென்ன ஏற்றம் மணிமுன்
திரும்பினன் சென்றுன் திகைத்து. (76)

ஆராய்ச்சி மாமணியின் அண்மை யுடன்மெலிந்து
சோரா முகத்துக்கண் ணீர்சொரிந்து—போராத
துன்புடன் நிற்கின்ற தூயபசு வின்முகத்தை
அன்புடன் கண்டான் அரசு. (77)

அய்யகோ இப்பசுவிற் கர்ரே இடர்விளைத்தார்
மய்யிலா இக்கோவின் மாமனந்தான்—நய்யுறவே
எத்துன்ப மெய்திற்றோ என்ன வியல்பிற்றோ
அத்துன்ப மேதெனவே ஆய்ந்து. (78)

யாருரைப்பார் ஈங்கதனை எவ்வாறி யானறிவேன்
ஏரமரும் இப்பசுவிற் கிவ்வின்னல்—சேரவே
எக்கொடியோன் செய்தான் இயைபிலா தாங்கவனும்
இக்கொடுமை எய்திடவே என்று. (79)

மதியமைச்சர் தம்மை மனுவரசன் பார்த்தே
மதியற்ற நம்மாலே வந்த—அதிதுன்பம்
எக்கார ணத்தால் இயைந்ததென வென்முன்னே
துக்கமறச் சொல்வீர்கள் சூழ்ந்து. (80)

என்றுரைப்பக் கேட்ட எழிலமைச்ச ருள்ளொருவன்
இன்றரசே நின்சேய் இவர்ந்தினிது—சென்றரதம்
சேங்கன்று மாயச் சிதைத்திடலால் தாய்ப்பசுவும்
தூங்குமணி தட்டியதாற் சோர்ந்து. (81)

எனவே வளவன் இதயந் துடிப்ப
மனவே தனையின் மயங்கி—நனவோ
கனவோ கருதிக் கடுவினையான் முன்செய்
தினவோ எனவே தளர்ந்து. (82)

அஞ்சு புலனும் அறிவு மிகக்கலங்கிப்
பஞ்சப் பிராணன் பதைபதைக்க—நெஞ்சுலர்ந்து
பேச்சுமூச் சில்லாப் பிணம்போற் கிடந்திட்டான்
ஓச்சு மனுமுறையோன் ஓய்ந்து. (83)

மந்திரிகள் செய்தவுயர் மன்னுபசா ரந்தன்னால்
அந்தமனு மன்னன் அயர்வொழிந்து—முந்திச்
செழுந்தரையின் மீதுமகன் செய்தபழி யெண்ணி
அழுந்திமனம் கன்றினான் அன்று. (84)

எழுந்தான் குழக்கன் றிறந்ததெனுஞ் செந்திக்
கொழுந்தாற் கொளுத்தக் குலைந்தான்—விழுந்தான்
அழுதானென் ஆட்சி அவனிமிசை யின்றே
பழுதான தென்று பகர்ந்து. (85)

குற்றஞ்செய் தாரைக் கொலைசெய்தார் என்றுநாம்
உற்றுக்கேட் டாலும் உறும்பாவம்—நற்றமிலா
இச்சொல்லைக் கேட்டிடற்கிங் கெப்பாவஞ் செய்தனமென்
றச்சமிக எய்தினான் ஆங்கு. (86)

பிள்ளைவரம் வேண்டிப் பெரும்பேயை நாடினர்போற்
குள்ளனைக்கொண் டாழங் குறிப்பவர்போற்—கள்ளமிலாக்
கொல்லையூட் காட்டிபாற் கூலிபெற வந்தவர்போல்
தொல்லையுறு மிப்பசுவும் சூழ்ந்து. (87)

முன்மனுவைச் சார்ந்தால் முறைபெறலாம் என்றெண்ணி
என்முனம்வந் துற்றதுவே இப்பசுவும்—மன்முறையைத்
தோரா தீயர்வேனென் செய்வேன் எனத்தியங்கிப்
பாராளு மன்னன் பதைத்து. (88)

ஆவின் குழக்கன்றின் ஆருயிரை மாய்த்திழிந்த
பாவியினைப் பெற்றிட்ட பாதகனு—மேவுகின்ற
யானே அரசாள்வேன் யானே முறைதெரிவேன்
யானே அளியையுடை யான். (89)

மலைமேல் உதித்தெழுவான் மாமரபில் புட்குத்
துலைமேல் இவர்ந்தான்றன் தொன்மைக்—குலமாயான்
பொன்னின் குழக்கன்று பொன்றிடல்கேட் டின்னுயிரோ
டின்னு மிருக்கின்றேன் என். (90)

பொல்லாவிப் பாவத்தைப் போக்குநெறி இன்றெனவே
வல்லே அரசன் மயங்கலுநூல்—எல்லாம்
கரைகண்ட ஓர்பனவன் காவலன்முன் நண்ணி
உரைகண்டான் தீர்வை உணர்ந்து. (91)

தெரியறிவிற் செய்பாவம் தீராது மற்றும்
புரிபாவம் எத்தனையும் போக்கற்—குரியனவே
ஆதலினின் காதல் அறியாது செய்தவது
போதரவே சொல்வேனிப் போழ்து. (92)

தங்கத்தாற் கன்றுபல தான்செய்தே வேதியர்தம்
அங்கை யளிக்க அறும்பாவம்—இங்கணிதே
என்மொழியோ அன்றும் எழிற்கரும காண்டத்தின்
நன்மொழியே ஆமிதனை நாடு. (93)

இவ்வண்ணம் கூற இறையவனும் என்மகன்றான்
எவ்வண்ணம் செய்தாலும் ஏற்றாவின்—நைவண்ணம்
போகுவதோ போகாதே என்றாலும் நான்பதர்போல்
ஆகுவதோ தக்க அறம். (94)

இப்பசுவின் கன்றுற்ற இந்நிலையே என்சுதனும்
தப்பறவே சார்கவெனச் சாற்றியே—ஒப்பறுசீர்
நற்கலா வல்லவனும் நல்லமைச்சன் தன்னைவிளித்
தெற்குமாற் கொல்லென்றான் ஈங்கு. (95)

ஒருமைந்தனே குலத்துக் குள்ளானென் றோரான்
தருமந்தான் சாற்றுநெறி சார்தல்—கருமந்தான்
என்றுமனு தேராழி இன்மகன்மேல் ஊர்கென்றான்
துன்றுமர செத்தகைத்தோ சொல். (96)

இவ்வாணை ஏற்ற எழின்மந் திரத்தலைவன்
ஒவ்வாச்செல் கேட்டொடுங்கும் ஓரவம்—எவ்வாறு
துன்புறுமவ் வாறே துயரமெய்தி யோர்சிறிதும்
இன்பறவே உண்மெலிந்தா னே. (97)

என்விதியின் வன்மை இருந்தவா றென்னென்றுச்
சொல்மதியின் மந்திரத்தான் சோர்ந்தேநான்—மன்மகனைக்
கொல்லுமிந்த வல்வினையைக் கொள்வேனோ பாவியேன்
ஒல்லுமூர்ந்து தீவினையி தோ. (98)

பச்சிளங் கன்றதனைப் பாராது கொன்றதற்கா
மெச்சிளம் புத்திரன்றன் மெய்யழிக்க—நிச்சயித்தான்
நான்மறைதேர் மன்னவனோர் நன்மகனைக் கொல்லுதற்கோ
நான்மறைதேர் வுற்றேன் நனி. (99)

மன்னவன் ஆணை மறுத்தல் வழக்கன்றும்
மன்மகனை மாய்த்தலினும் யான்மாளல்—இன்னலல
என்றுளீரத்து வாளால் எறிந்திட்டான் தன்றலையை
அன்றுயிர்போ மாறங் கவன். (100)

மாண்ட கலைவல்லான் மாண்பை மருங்குள்ளோர்
மாண்ட மனுநீதி மன்னவன்பால்—வேண்டி
விளம்பிடலும் வெம்புண்ணில் வேலுறைந்த பான்மை
உளம்பிணியுற் றாழ்ந்தான் உழன்று. (101)

கப்பல் உடைந்து கலங்குங்காற் சேமஞ்செய்
தெப்பமும் ஆங்குச் சிதைந்திடல்போற்—செப்புகன்றின்
வெம்பழிக்கு வாடுங்கால் மேவியதே மந்திரத்தான்
துன்பிழைக்கும் இப்பழியும் தொக்கு. (102)

கன்றினுயிர் மாளத்தன் கான்முளை செய்ததற்குத்
துன்றுகலை வல்லவனைச் சூழ்ந்தொருகால்—கொன்றவொரு
மன்னனெனக் கூறும் வசையுற்றேன் மாண்பற்றேன்
என்னினியான் செய்வன் இதற்கு. (103)

மந்திரி தான்மாண்ட மாபாவம் தீர்தற்கா
நந்து மெனதுயிரை நான்மாய்ப்பேன்—சிந்தைமிக
நோவுற்று வாழேன் நொடியில் மகன்றனையும்
கோவுக்காக் கொல்வேன் குறித்து. (104)

என்று துணிந்தெதிரில் நிற்பாரை இப்பொழுதே
சென்றுநீர் கொற்றிகொலை செய்தானைக்—கன்றுமுனம்
செத்தவிடஞ் சேர்த்துக் கிடத்துங்கள் தேரூர்வன்
இத்தருணம் என்றான் இறை. (105)

மன்னன் மொழிக்கு மறுமொழியு முண்டுகொலோ
அன்னவண மேசெய்தார் ஆங்கமர்வோர்—சென்னியுமோ
தேர்விடுதல் செய்தான் சிறுவன்மேல் இச்செயல்கண்
டூர்விடுகண் ணீராற்றின் ஊடு. (106)

ஏங்கியழல் பண்ணு இருந்தாற்றல் காளமதா
ஓங்கிருளை மார்படிப்பே ஓர்பறையா—தீங்கிதெனச்
சொல்லலரே தூவலராச் சோர்கண்ணீ ரேமுத்தா
ஒல்லுறவே நின்றதந்த வூர். (107)

மாசுறுமன் னீதியென்பார் வல்லமைச்சர் இல்லையென்பார்
ஈசனது சோதனையே ஈதென்பார்—காசுபெறுக்
கன்றுயிரைப் பெற்றிடுமோ கான்முளையை மாய்த்ததனால்
என்றுரைப்பார் ஊரார் எடுத்து. (108)

பெருநகரம் இவ்வண்ணம் பேதுறுதல் கண்டுந்
திருநெடுந்தேர் ஊர்ந்துவந்து சென்னி—ஒருமகன்மேல்
ஏற்றினான் ஏற்ற இளவல் இரணமயச்
சேற்றினான் ஆனான் சிதைந்து. (109)

கொற்றிப் பழிதீர்த்த கோமானும் மந்திரிதன்
மற்றப் பழிதனையும் மாற்றுதற்கு—வெற்றித்தேர்
மேனின் றிழிந்தான் இழிதாலும் மின்னுமொளி
வானின் றிழிந்ததங்கு மற்று. (110)

சேல்விழியாள் பங்கிருப்பச் செல்வரிரு பால்விளங்க
மேல்விபுதர் மாலயனும் வேண்டல்செய—மால்விடைமேற்
காட்சிதந்தான் ஈசன் ககனமிசைத் தோன்றி
ஆட்சிதந்த சோழனெதிர் ஆங்கு. (111)

கண்ணிறைந்த காட்சிதனைக் கண்ட மனுவேந்தன்
உண்ணிறைந்த அன்பின் உறவணங்கிப்—பண்ணிறைந்த
வாக்கியத்தால் தோத்திரித்தான் மல்கிடக்கண் இன்பநீர்
ஆக்கைமயிர்க் கூச்செறிப்ப ஆங்கு. (112)

தோழிக் கீழுற்றுத் தேகமெலாம் நைந்துநின்ற
காராவின் கன்று கவினுற்று—சீராரும்
இன்னுயிரைப் பெற்றங் கெழுந்துடனே துள்ளியதால்
அன்னைமகிழ் வெய்த அவண். (113)

நற்கலா வல்லவனும் நான்மறைதேர் மன்சுதனும்
எற்குலத்தான் முன்னுயிர்பெற் றேயெழுந்து—விற்கலைசார்
மாமதிய மென்ன மகிழ்முகத்தர் ஆகியங்கே
ஏமமுற நின்றார் இனிது. (114)

மாண்டோர்கள் உய்ந்ததையும் மன்னவன்றன் நீதியையும்
காண்டேவர் யாரும் களிப்புமிகப்—பூண்டோராய்ப்
பொன்மலர் மாரி பொழிந்தார்கள் ஈசனையும்
மன்மனுவை யும்வாழ்த்தி மற்று. (115)

என்னிடத்தே மெய்ப்பற்றை ஏர்பெறவே நீகொண்டு
முன்னை மனுநூல் முறைதவறா—தெந்நாளும்
காக்குமனுச் சோழநின் காவல் முறைதன்னை
ஆர்க்கும் அறிவிப்பான் ஆய்ந்து. (116)

நானே உபதையினை நன்மைபெற வேசெய்தேன்
கோனே இதில்நினக்குக் கோதில்லை—தேனையும்
ஆரணியும் சென்னி அறிவுடையாய் ஆனபுகழ்
ஓரணியாய்க் கொள்ளும் உனக்கு. (117)

என்றுரைத்த பெம்மான் எழிற்சோதி யின்னுருவம்
அன்றுடனே தோற்றுதங் கந்தரத்தில்—சென்றிடலும்
அவ்வயி னுற்றோர் அரனையும் மன்னனையும்
செவ்விதின் போற்றிசைத்தார் சேர்ந்து. (118)

மாதமும் மாரி வழங்கிட மன்னுயிரும்
சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மைபெறச்—சோதிமணிச்
சிங்கா தனத்துச் சிறந்திருந்தான் வேந்துமனு
அங்கா தரத்தின் அமர்ந்து. (119)

## வாழ்த்து.

வாழி மறையவர்கள் வாழிமறை வானவர்கள்
வாழி பசுவினங்கள் மாண்புறவே—வாழியவே
நன்மா ணவர்விருந்து நானிலத்தில் வாழியிந்நூல்
பன்மா ணவரும் படித்து. (120)

வாழி மனுவாழி மன்னுயிரெல் லாம்வாழி
வாழி தமிழ்மொழிநன் மாநிலத்தில்—வாழியவே
தண்டமிழைத் தாயெனவே தாம்போற்று வோர்வாழி
கண்டமர்பா வாணர் களித்து. (121)

முற்றிற்று.

# செய்யுட் குறிப்புகள்.

## I. கரிகால சோழன் வெண்பா.

(1) செந்தமிழ்-செம்மையாகியதமிழ். தந்திமுகன்-யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள். தலைக்கு அணிவோம்-தலையிற் சூடுவோம். உருபுமயக்கம். இவ்வெண்பாவின் பின்னிரண்டடிகள் யமகம். கரி-யானை. காலன்ஊர்-வைவசுதபட்டணம்; இது யமனுடைய நகரம். உடற்று-போர்செய்த. உடற்றுகோழி-வினைத்தொகை. கோழி-உறையூர். யானையைவென்ற கோழியிருந்த நிலமாதலால் கோழி என்ற பெயர் பெற்றது. கரிகாலன்-கரிந்தகாலையுடையவன். பின் 30-ஆம் செய்யுளில் இது கூறப்படுகிறது.

(2) வண்டர்-வண்டு. குற்றியலுகர ஈற்றுப்போலி. தேறல்-தேன். கடுகி-விரைந்துசென்று. செய்-நன்செய். புனல்நாடு-சோழநாடு.

(3) பல்கி-அதிகரித்து. அமரர்பதி-அமராபதி: தேவருலகத்தின் தலைநகரம். மானும்-ஒக்கும். தொல்லை-பழைமை. கறையூர்-களங்கத்துடன் ஊர்ந்துசெல்கின்ற.

(4) உருவம்-அழகு. சென்னி-சோழன். பஃறேர் இளஞ்சேட்சென்னி-கரிகாலனது தந்தையின் பெயர். அழுந்தூர்வேண்மான்-ஒரு சிற்றரசன். அங்கி-அக்கினி. வேட்டு-மணந்து. பதம்-பாதம். ஐம்பயம்-தன்னாலும், பரிசனங்களாலும், பகைவராலும், கள்வராலும், தீய விலங்குகளாலும் தோன்றும் 5 பயங்கள்.

(5) பன்னி - பத்தினி, மனைவி. சிலையார் - வில்லையொத்த கொண்டல்-மேகம், மேகநிறமுடைய இராமன்; உவமையாகு பெயர். கருக்கொண்டாள்-கருப்பமானாள்.

(7) ஓரை-ஒரு சிறு காலத்தினளவு. மா தம்பத்து ஆனை மருவலர்க்கு-பெரிய தூணிற் கட்டப்பட்ட யானையை ஒத்த பகைவர்க்கு. மாதம்பம்வந்தான்-நரசிம்மன். சிந்தாத-தொடர்ச்சியறாத. கெடாத.

180892

(8) கான்முளை-வமிசத்தில் உதித்த முளைபோன்றவன்; மகன்.

(9) குதலைபுகன்று-மழலைச்சொற்கள் பேசி. ஆர்ந்தளர்ந்து-தங்கித் தளர்வி.

(10) படைக்கு எய்கலைகள் - யுத்தத்திற்குரிய வித்தைகள். (தனுர்வேதம்) கன்றி-கோபித்து. ஒன்னார்-விரோதிகள்.

(11) வான்-சுவர்க்கம். இறை-அரசன். மதித்து-எண்ணி.

(12) சேயும்-சோழன் மகனும். நீடு இசையால்-மிகுந்த கீர்த்தியால். ஊழ்வழியே-விதிப்படியே.

(13) மருவுஊர்-தான் தங்கும்படியான ஊர். மாழ்கி-வருந்தி. கரந்து-மறைத்து. மருஊரும்-வாசனைவீசும். ஆர் இரும்தார்-பெரிய ஆத்திப்பூமாலை. அல்லல் உறுதார்-துன்பப்படாதவர்கள். ஆர் இருந்தார்-யார் இருந்தார்கள்? (ஒருவருமில்லை)

(14) சேய்-குமாரன். இகல் உற்று-பகையுற்று. அப்பால்படும் கோள்-அரசத்தன்மையினின்றும் நீங்கும் கொள்கை.

(15) பீடு-பெருமை. கோணது-நீதிவழுவாது. கொற்றவன் இல்-அரசன் இல்லாத. திருநாண் இலாக் களம்போல்-அழகிய மாங்கல்ய சூத்திரமில்லாக் கழுத்தேபோல். சீர்மாய்ந்து-சிறப்பு அழிந்து.

(16) வீரம் அரிதன்னை-வீரமானது சிங்கத்தையும். விஞ்சை-கல்வி. கலைமங்கையை-சரஸ்வதியையும். மால்தாரம்-திருமகள். அரி தன்னை-திருமாலையும். தண்ணீதிசாரம்-நல்ல நீதியின் சாரமானது. மனுநூலை-மனுதர்ம சாத்திரத்தையும். துலையை-துலாக்கோலையும். வேலை உலகு-சமுத்திரத்தால் சூழப்பட்ட உலகம்.

(17) எழில்-அழகு. உம்பர்பிரான்-தேவதேவன். செய்ய-செம்மையாகிய. தஞ்சம்-அடைக்கலம்.

(18) இருக்கு-வேதம். ஒலிடும்-ஓலமிடும். செருக்கினனாய்-செருக்குக்கொண்டவனாகி. நவ வேந்து-புதிய அரசன்.

(19) பார்த்திபன்-அரசன். பொல்லன்-தீயோன். அந்தரத்தில் ஒரு வாக்கு-அசரீரி.

JB 03106

(20) கழுமலம்-சீர்காழி. களிறு-யானை. பழுதில்-குற்றமில்லாத. விழுமம்-மேன்மை. உந்திடுக-செலுத்துக. இதில் இடு-துணைவினை. ஓர்ந்து-ஆராய்ந்து.

(21) அடிபரவி-பாதங்களை வணங்கி. காழி-சீர்காழி. அணி நகர்-அழகிய நகரத்தில். கருவூர்-ஒரு சிவஸ்தலம்; அமராவதி நதிக் கரையில் உள்ளது.

(22) மத்தகம்-யானைத்தலை. நிறையூர் தொடர-நிறைந்த ஊரிலுள்ளோர் தொடர்ந்துவர. நெருங்கு இயங்கள்-நெருங்கிய வாத்தியங்கள். ஆர்ப்ப-ஒலிக்க.

(23) அரியணை-சிங்காதனம். அமர்வித்து-அமரச்செய்து.

(24) நிருபர்-அரசர். வஞ்சம்-வஞ்சனை.

(25) படை-சேனை. காசு அறு-குற்றமற்ற. கை கால் யாத்து-கையையும் காலையும் கட்டி. சிறைக்கோட்டம்-சிறைச்சாலை. இறைக் கோட்டம்-அரசன் இருக்குமிடம்.

(26) வீந்தான்-இறந்தோன். முடிவேய்ந்தான்-கிரீடம் அணிந்தான். மேல்குறுகும்-இனிச் சமீபிக்கும்.

(27) இகல்வேந்து-பகையரசன். மறைமகன் - மறைந்திருந்த மனிதன்.

(28) திங்கள்-மாதம். அவிந்துபட-அழிந்தொழிய. தெவ்வரையன்-பகையரசன். தாள்-கால். தளை-விலங்கு. வாளரி-சிங்கம். கதிர்க் குலம்-சூரியகுலம்.

(30) சீயம்-சிங்கம்.

(31) பொள்ளென-சட்டென. கனல்காட்டும் கண்ணுதன்-பரமசிவன்.

(33) சிந்துரங்கள்-யானைகள். சிந்தூரம்-செம்பொடி. தேர்மா-தேரிற்கட்டிய குதிரைகள். மா-பிண்டி; மாவு. படர்-படைவீரர். பொன்னிநாடன்-சோழன்.

(34) சமர்-போர். மன்பதை-மக்கட்கூட்டம். தானை-சேனை. எய்த்து உள் நையாநின்றார்-களைத்து மனம்வருந்தாதவர்கள்.

(35) உருமாறியும்-மாறுவேடந்தரித்தும். உட்கி-அச்சமுற்று. பரணி-ஒருவகைப்பிரபந்தம்.

(36) சென்னி-தலை. செயத் தம்பம்-வெற்றித்தூண். சேய்-கரிகாலன்.

(37) எப்பாலவரும்-எவ்வருணத்தாரும். துப்பார-பரிசுத்தமிக. வியனிலம்-பெரியநிலம். நால்திருத்தாள் ஆம் நடை எனப்பிரிக்க.

(38) இசையிசையும்-கீர்த்திபெற்ற. நசை-ஆசை.

(39) வாரி அலை அனைய-சமுத்திர அலையை ஒத்த. கடி-காவலையுடைய.

(40) கைதவர்கோன்-பாண்டியன். அரி-சிங்கம். அஞ்சலி-வணக்கம்.

(41) இறகிற்பறவா எழிலஉறு சொக்கு-குதிரை. கலுழும்-ஒழுகும். யானை, பரி, காலாள், தேர்-பெயர்ச்செவ்வெண். பின்னிரண்டடி உருவகவணி.

(42) நெறி-வழி. குறும்பர்-சிற்றரசர். வீறு-பெருமை. வாகை-வெற்றிமாலை. திறை-கப்பம். ஒகை-உவகைதரும்.

(43) பெருவஞ்சி-வஞ்சிமாநகரம். சேரலாதன்-செங்குட்டுவன் தந்தை: சேரர்கோன்.

(44) கோதை - சேரன். சிலைவாங்கி-வில்லைவளைத்து. சாமனிழ-பாணவருஷம். வில்லவன்-சேரன்.

(45) வாளி-அம்பு. உதியன்-சேரன். புறப்புண்-முதுகிலுள்ள புண்.

(47) தூரியங்கள் - வாத்தியங்கள். ஆரியர் - விந்தியத்திற்கும் இமயத்திற்கும் இடைப்பட்ட நாட்டினர். செண்டு-ஒருவகை ஆயுதம். புலி-புலிக்கொடி. வேந்து-கரிகாலன்.

(48) வாரணங்கள்-யானைகள். அவந்தி-மாளவநாட்டின் தலைநகர். உச்சயினி என்னும் மாறுபெயருடையது.

(49) வீமம்உறு-பயங்கரம் செய்தலைப்பொருந்திய.தோம் அறு-குற்றம் அற்ற. வெகிட்டு-மூதகிட்டு.

(50) கந்துகம்-குதிரை. கற்பணி-இரத்தினாபரணம்.வடவரை-மேருமலை.

(51) இமசேது-இமயமலையும் இராமேசுவரமும். சின்னம்-வெற்றிச்சின்னம்.

(52) வெண்மலராள்-கலைமகள். விந்தை-வீரமகள். தாண்மலராள்-இலக்குமி. ஆகம்-மார்பு. அருகு உடையோர்-அருகிலுள்ளார். ஒருகுடை-ஏகசக்ராதிபத்தியம்.

(53) அவைக்கண்-அரசசபையில். இருக்கை-ஆசனம்.

(54) ஆசி-வாழ்த்துதல். அந்தம்இல்-முடிவற்ற. சீர்-சிறப்பு.

(55) செயிர்தீர்-குற்றமற்ற. உயிர்தீர்வுபெற்ற உடம்பு-பிணம்.

(56) இன்மை-வறுமை. தீஞ்சொல்-இன்சொல். முருகு-இளமை; அழகு; வாசனை. குழவி-குழந்தை.

(57) காடு - சுடுகாடு. மனையறம் - இல்லறம். மெய்-உடல். விழல்-வீண்.

(59) இன்னே-இப்பொழுதே. தவர்-முனிவர்.

(61) வண்மை-கொடைத்தன்மை. கூர்-மிகுந்த.

(63) பெருவேள்-நாங்கூர்வேள். வேற்கை ஒருவேள்-முருகன். கருவேள்-மன்மதன். நன்நுதலை-அழகிய நெற்றியை யுடையவளை.

(64) தோகை-மயில்போலும் சாயலையுடைய நாங்கூர்வேளின் மகள். பொற்ற-பொன்னாற் செய்யப்பட்ட. பல் இயங்கள்-பல வாத்தியங்கள். ஒல்லை-விரைவு. உற்றார்-அடைந்தார்.

(65) வல்லோரை-வலிமையையுடையவர்களை.நயந்து-விரும்பி. வில்ஓர்வரையான்-பரமசிவன்.மலைமகளை-பார்வதியை.வேதன்-பிரமன். மறைமகள்—சரஸ்வதி.

(66) வேய்தந்த-மூங்கிலையொத்த. வேந்தர்க்கு வேந்தாவான்-சக்கரவர்த்தி: கரிகாலன்.

(67) அடல்-வலிமை. பொருவும்-ஒக்கும். தடனூர்-விசாலமான. உறையூர் என்றது சிலேடைப்பொருளது. உவரி-சமுத்திரம். புகார்-காவிரிப்பூம்பட்டினம்.

(68) கார்-மேகம். மறுகு-தெருக்கள்.

(69) கூலம்-பதினெண்வகைத் தானியங்கள். மேழியர்-பூவைசியர். பொற்பு-அழகு. புரிந்து-விரும்பி.

(71) அறச்சாலை-தர்மச்சாலை. பம்பல்-நெருக்கம்.

(72) உமணர் - உப்புவணிகர். பரதவர்-நெய்தல்நிலமாக்கள். துன்னுதொழில்-தையற்றொழில். படிவம்-உருவம்; சிலை. நாற்கருவி-தோல், துளை, நரம்பு, கஞ்சம். ஓவியர்-சித்திரக்காரர். இறை-கரிகாலன்.

(73) நாவாய்-கப்பல். கலங்கரை விளக்கம்-Light house ஆயத்துறை-கப்பல்வழி வரும் பொருட்கு வரிவாங்குமிடம்.

(76) பன்ன-சொல்ல. வளம்மலிந்த-செழுமைமிகுந்த. தளம்-சேனை. ஆரணிவேந்தன்-ஆத்திப்பூமாலையணிந்த கரிகாலன்.

(81) புனல்நாட-கரிகாற்சோழனே. மனுநாடி-மனுதர்ம சாஸ்திரத்தை ஆராய்ந்து.

(82) பாத்து அறியும்-பகுத்தறியும். பண்பினர்-குணமுடையோர்.

(83) மாண்ட-சிறந்த. அறச்சிறியை-மிகச்சிறியவன்.

(84) ஞாயம்-நியாயம். வாளை-வாளைமீன். வளவன்-கரிகாற்சோழன்.

(87) ஈர்ந்த-பிளந்த. ஆண்டு-அங்கு. மாற்றார்-பகைவர். மன்-அரசு.

(88) கதுமென-சட்டென. முதுவேடம்-கிழவேஷம்.

(89) உரைமுடிவு-வழக்கிலுண்மை. விச்சை-வித்தை.

(90) நன்றுறுமா-நன்மையடையுமாறு. மன்று-சபை. கோமாறுஇலாத-அரசத்தன்மை மாறுபடாத. பூமாரி-பூமழை.

## II. பொற்கைப்பாண்டியன்.

(1) அற்பு-அன்பு. எழில்-அழகு. கணேசன்-சிவகணத்தலைவன் ஆகிய விநாயகன்.

(2) முத்தமிழ்-இயல், இசை, நாடகம் என்னும் 3 தமிழ். அத்தன்-பரமசிவன். வம்மிசம்-குலம்.

(3) மரைமலர்-தாமரைமலர். தாது அவிழ்-மகரந்தத்தூளுடன் விரியும்.

(4) சேடன்-ஆதிசேஷன். மானுவர்-ஒப்பர். வேடனையே-வேள் தனையே; மன்மதனையே. பிங்கலன்-குபேரன். கடப்பாடு-கடமை. கார்-மேகம்.

(5) பெம்மான்-பெருமான். தகவு-பெருமை. நம்பன் - பரமசிவன். அரும்பா-திருப்பாசுரப்பதிகம்: 'வாழ்க அந்தணர்' எனவருவது. மாட்சி-பெருமை. வேகவதி-வைகைநதி.

(6) பேறு-சிறப்பு. நத்துகின்ற-விரும்புகின்ற. ஆர்கலி-சமுத்திரம். நண்ணேன்-அடையேன்.

(7) இன்னல்-துன்பம். இன்னலம்-நல்லநலம். பொருநை-தாம்பிரவர்ணி நதி.

(8) ஆர்அமுதம்-அருமையான தேவாமிர்தம். தமிழை-தமிழ்மொழியை. ஆரணம்-வேதம். ஆரும்—பொருந்தியிருக்கிற. பொருப்பே-மலையே. கிரி-மலை.

(9) ஆரம்-சந்தனம். கூத்தன்-நடராஜன்.

(10) வேணிக்கடவுள்-சடாபாரமுடைய பரமசிவன். வண்கலைத்தேர் நங்கை-சரஸ்வதி. கூடற்பதி-மதுரைநகர்.

(11) விளையாடல்-திருவிளையாடல்கள். அறுபான்நான்கு-64. புரிய-செய்ய. பெம்மான்-சோமசுந்தரக்கடவுள். புரி-நகர்.

(12) கார்த்திரள்-மேகக்கூட்டம். பானு—சூரியன். அண்ணல்-பெருமை. மதிமுன்னர்-சந்திரன்முன். நண்ணல்-அடையாதே.

(13) தன்னுயிரை நீத்த தராதிபன்-பாண்டியன்: நெடுஞ்செழியன். மன்னுபதி-நிலைபெற்றநகர்.

(14) குலசேகரமன்-குலசேகரபாண்டியன்.

(15) நந்தல் - கெடுதல். இல்லக்கிழத்தி - மனைவி. மைதவந்து-தடவி.

(16) ஈரைந்துஆண்டு-10வருடம். எல்லை-வரை.

(17) கொண்டான்-கணவன். கோற்றொடி-கோலாற்செய்யப்பட்ட தொடியையுடையாள்; அன்மொழித்தொகை. ஒன்றியா-தனியாக.

(18) திருவே-இலக்குமிதேவி போன்றவளே. துப்புஇதழாய்-பவளம்போலும் சிவந்த இதழுடையவளே. நளிர்-குளிர்ச்சி.

(21) நம்கோ-நமது அரசன். போன்னே-இலக்குமிதேவி போல்வாளே. அச்சம்-பயம்.

(22) உன்னுவது-நினைப்பது. துன்று-நெருங்கிய. நிறை-கற்பு. தலை-முதன்மை. பின்னிரண்டடி குறள்.

(24) சடலம்-சரீரம். நீறுபடும்-சாம்பலாம். போற்றிடுவன்-காப்பாற்றுவேன்.

(25) கோதிலாய்-குற்றமற்றவளே. பாகீரதிஆட - கங்கையில் நீராட.

(27) மேவி-அடைந்து. வேய்வந்த-மூங்கிலையொத்த. வியக்க-ஆச்சரியப்பட. ஆறு-விதம்.

(28) உள்நைந்து-மனம்வருந்தி.

(29) இற்கு உரியோன் - வீட்டுக்குடையவன்: கீரந்தைவேதியன். மாற்றார்க்குக் கூற்று ஆகும் மன்-பகைவர்க்கு யமனைப்போன்ற குலசேகர பாண்டிய மன்னவன்.

(30) ஆணை-ஆட்சி. எய்திடலால்-பொருந்தியிருத்தலால். ஏதிலன்-அயலான்.

(31). எழும்ஐயம்-தோன்றிய சந்தேகம். புடைத்தான்-தட்டினான். சிட்டன்-ஒழுக்கமுறை நிற்போன். துட்டன்-துஷ்டன்.

(32) பூதேவன்-பூசுரன்: கீர்த்தை. துணி-அச்சம்.

(33) ஒல்லாத-கூடாத. புரிந்தது-செய்தது. இதயத்து-மனத்தில்.

(35) பேர்அவை-பெரியசபை. திண்ணம்-உறுதி.

(37) எத்தன்-ஏமாற்றுவோன்; வஞ்சகன்.

(38) ஒளிர்-விளங்குகின்ற. செம்மால்-அரசே.

(39) பரவல்-பாவியிருத்தல். விரவு-சேர்ந்த.

(40) தூ-பரிசுத்தமான. ஒறுப்பல்-தண்டிப்பேன். எவ்வமிலீர்-குற்றமற்றவர்களே.

(41) பங்கம்-ஈனம். விண்டு-திருமால்.

(42) அற்புதத்தார்-அறிவுடையோர். இல் புதவம்-வீட்டுக்கதவு.

(43) கரி-சாக்ஷி. ஊனம்-குறைவு. கோன்-குலசேகரமன்னன்.

(44) மட்டு-தேன். கற்பகத்தார்-கற்பகப்பூமாலை. பிணித்த-கட்டிய. இச்செய்யுளில் திருவிளையாடற்கதை அடங்கியுள்ளது.

(45) சதி-வஞ்சகம்; கேடு.

(47) இன்ன - இவ்வார்த்தைகளை. என்ஆவி-என் உயிர். அன்ன-ஒத்த. அவையீர்-சபையோர்களே. புன்செய்கை-அற்பமான செயல். செய் கை-செய்த கை; வினைத்தொகை.

(48) ஓவியம்-சித்திரம். நிகழ்த்துவான்-சொல்லுவான்.

(49) உரவன்-அறிவுடையோன். கரிசு அகல்-குற்றமற்ற.

(50) நென்னல்-நேற்று.

(51) அகம்-வீடு. தெள்ளறிவு-தெளிந்த அறிவு.

(52) நான்மறையும் பன்னு-நான்குவேதங்களையும் ஓதும். பனவர்-அந்தணர்.

(53) செவ்வண்ணம்-சிவந்த நிறம். மெய்வண்ணம்-உண்மைத்திறம்.

(54) துலைசேர்ந்தகோமான் - சிபிவேந்து. தோன்றலைத் தன் தேர்க்கீழ்க் கொலை சேர்ந்த கோமான்-மனுமுறைகண்ட சோழன். தலம்-உலகம். நிமலன்-சிவபெருமான்.

(55) கொற்கை-பாண்டிய நாட்டில் கடல் ஓரத்திலுள்ள ஒரு பட்டினம். சிலகாலம் இது பாண்டியர்க்குத் தலைநகரமாயிருந்தது. காமாரி=காம+அரி-காமனைக் காய்ந்தோன்; சிவபெருமான்.

(56) வழங்க பொழிய மனு-மனுநீதி. தாசரதி-தசரதபுத்திரனா இராமன். தரணி-உலகம். திகழ்ந்து-விளங்கி.

---

## III. மனுச்சோழன் வெண்பா.

(1) துங்கம் - உயர்வு. சேய்-மகன். ஐங்கரன்-ஐந்துகரங்களையுடைய விநாயகன்.

(3) நந்தா - குறையாத. வேலையுவர்-சமுத்திரத்தின் உப்புத்தன்மை.

(5) வான்குதிக்கும்-மேகங்கள் சஞ்சரிக்கின்ற. நான்குதிக்கும்-நான்கு திசைகளும். வாவி-தடாகம்.

(6) மருவாரும்-விரோதிகளும். கோடா-கோணுத.

(8) நிலைபுரளும்போது-நின்றநிலை நில்லாது மாறுகின்றகாலம்.

(11) சொற்பூண்புலவர் - சொல்லை ஆபரணமாகப் பூணும் புலவர்கள்.

(13) சால்பினர்-நற்குணமுள்ளோர். அணி-அழகு.

(15) இன்னுற்று-இன்பமுற்று. பன்னுற்றது-சொல்லியது.

(16) இடரில்-துன்பத்தில். இச்செய்யுளின் பின்னிரண்டடி திருக்குறள்.

(17) தொல்லை - பழமை. துய்த்திடினும்-அனுபவித்தாலும். மல்லல்-வளமை.

(20) வம்புஅவிழ்தார்-வாசனையுடன் விரிகின்ற பூமாலை. உம்பர்-தேவர்.

(21) பருவரல்-துன்பம். மகப்பேறு-குழந்தை பிறந்தமை. தூசு-ஆடை.

(22) இன்பப் பரவை-ஆனந்தக்கடல்.

(23) வளக்கு-அத்துச்சாரியை குறைந்தது. உளக் களிவின்-மனக்களிப்போடு. இறையும்-கொஞ்சமும். நிறைவரையும் - முற்றும் வரைக்கும்.

(25) கோள்-குற்றம். வாள் அனைய - வாளையொத்த. பூவாளி-புஷ்ப பாணம். எழில்புத்தேள்-மன்மதன்.

(27) பொறை-பொறுமை. தாதை-தந்தை. உரை-சொல்.

(28) இணை தாள் - இரண்டு பாதங்கள். மடன் - அறியாமை. மகன்-வீதிவிடங்கன்.

(29) பூததயை-உயிர்களிடத்து இரக்கம்வைத்தல். பொரு-வரிய-சமானம் சொல்லுதற்கு அரிய. ஏதம்அற-குற்றம்நீங்க.

(30) பளகுஅற-குற்றம்நீங்க. வளஅரசு-சோழன்.

(32) உச்சிமுகத்தல் பெற்றோர்க்கியல்பு. அச் சுதனை-அந்த மகனை.

(33) அள்ளல் - சேறு. கருங்கடல் - பெரிய திருப்பாற்கடல். கண்ணிமையார்-தேவர். பெருங்கடல்-பெருங்கடல்போன்ற சிவபெருமான்.

(36) பூவிலுறைபுத்தேள் - பிரமன். பொன்னமரும் மார்பினன்—திருமால். காவிலுறை தே-இந்திரன்.

(39) உழுவல்அன்பு-இடையறாத அன்பு. வழுவலன் - குற்றமற்ற வீதிவிடங்கன். உய்த்தான்-அனுப்பினான்.

(42) தெற்றெனவே - தெளிவாக. கண்ணுதல் - பரம்சிவன். உன்னி-நினைத்து. மாண்-மாண்பு.

(44) மாகதர்-அரசன் வீர முதலியவற்றைப் புகழ்வோர்.வந்தியர்-மங்கலப்பாடகர். மல்லர்-மற்போர்செய்வோர்.

(45) கட்டியங்கள்கூறுநர்-கட்டியக்காரர். கட்டியங்கள் - கட்டப்பட்ட வாத்தியங்கள்.

(46) அட்டபெரு மங்கலங்கள் ஏந்திவரும் சுந்தரர்-பெண்களை உணர்த்தும்.

(47) ஆதிவிடங்கன்-திருவாரூரில் எழுந்தருளியஈசன். புனிற்று இளம்கன்று-அதிக இளங்கன்று; மீமிசைச்சொல்.

(48) வியன்தேர்-பெரியதேர். கால்-சக்கரம். ஆகுலம்-துன்பம். சேய்வளவன்-வீதிவிடங்கன்.

(50) மலைபுரையும்-மலையொத்த; மிகப்பெரிய. காளை - காளை போன்ற வீதிவிடங்கன். ஆன்கன்று-பசுவின்கன்று. காற்றின்நேர்-காற்றுக்குச் சமானமாக.

(51) ஊன்கன்றி-உடல்வருந்தி. பட்டாலும் உய்வாயோ-செத்தாலும் பிழைப்பாயோ. மான்கன்றோர் கையான்-மான்கன்றை ஒரு கையிலுடைய பரமசிவன். தளி-கோயில். கையானது-கிடைத்தது.

(52, 53) இவற்றில் சிபிமன்னன் வரலாறு கூறப்படுகிறது.

(54) ஓர்ந்து - ஆராய்ந்து. புல்லேற்கு - அற்பனான எனக்கு. உய்வு-பிராயச்சித்தம்.

(56) மதி-சந்திரன். பானு-சூரியன். மாசு-குற்றம். தேசு-சிறப்பு.

(57) ஆற்றுவனோ-சகிப்பேனோ. தாவுஇல்-அழிதல் இல்லாத.

(59) குரிசில்-அரசிளங்குமரனே; அண்மைவிளி. இப்பார்-இவ்வுலகு.

(60) சென்னி-சோழன். பரிசனங்கள்-பரிவாரங்கள். துன்னியிட-நெருங்கிவர. தொக்கு-சேர்ந்து.

(61) தமரம்-துன்பம். நாகு-இளங்கன்று. மெய்வருந்தி-உடல் நைந்து.

(62) முத்தி-முத்தமிட்டு. கனலுலை-தீயுள்ள உலைக்களத்தில். கனிந்து-நெகிழ்ந்து.

(63) உயங்கும்-மனந்தளரும். பைங்கண்ணீர் ஆற்றில்-அழகிய கண்ணீராலாகிய ஆற்றில்; கன்றோடுமெலிந்து மிதக்கும் என இயையும்.

(64) இன்னல்-துன்பம். உய்திறன்-பிழைக்கும்விதம்.

(65) முன்னி-நினைந்து. அடுத்த-சமீபித்த.

(66) திக்குஆடி-திசைகளில் விளையாடி. உன்னுடல்-உன்விளையாட்டு.

(67) பீதநிறம்-தங்கநிறம் சுடர்-சுடல்.

(68) அரனார்-பரமசிவன். அறக்கடவுள்-தர்மதேவதை. தூய்ய மனு-பரிசுத்தமான மனுச்சோழன். தாழங்கோல்-தாழ்ப்பாள், அம் சாரிகை.

(70) மானும்-போலும். திக்கு-ஆதரவு.

(73) கோட்டால்-கொம்பால். தளர்வு அறிவு-தளர்ச்சியுடைய அறிவு.

(74) நாதம்-ஓசை. மணிநாகம்-இரத்தினத்தையுடைய பாம்பு. ஆர் அணிநாதன்-ஆத்திப்பூமாலையணிந்த சோழன்; மனுச்சோழன்.

(75) நேர்ச்சி-தகுதி. நிருபர்கோ - அரசர்க்கரசனே. துஞ்சு மணி-அடிக்கப்பெறாத மணி.

(76) மாற்றம்-சொல். சிவை-உலை. ஒன்றும்-பொருந்தும்.

(77) அண்மை - சமீபம். உடல்மெலிந்து - மெய்சோர்ந்து. பேராத-நீங்காத.

(78) மய்யிலா-குற்றமற்ற. நய்யுறவே-வருந்தவே.

(82) நனவு-தெளிவு. கனவு-சொப்பனம்.

(83) அஞ்சுபுலன்-ஐம்புலன்; அஞ்சு ஐந்து என்பதன் மரூஉ. பஞ்சப் பிராணன்-ஐந்துவகைப் பிராணன்.

(84) அவனி-உலகம். பழுது-குற்றம். பகர்ந்து-சொல்லி.

(88) தியங்கி-மயங்கி. பார் ஆளும் மன்னன்-மனுச்சோழன்.

(89) குழக்கன்று-இளங்கன்று. மேவுகின்ற-பொருந்துகின்ற. அளி-இரக்கம்.

(90) இதன்முன் 2 அடிகளில் சிபியரசன் வரலாறு அமைந்துளது. மலைமேல் உதித்தெழுவான்-சூரியன். மரபு-வம்சம். புட்கு-பக்ஷிக்கு; புறவுக்கு. துலை-துலாக்கோல்.

(91) வல்லே-விரைவில். பனவன்-பிராமணன். காவலன்-மனுச்சோழன். நண்ணி-பொருந்தி. தீர்வை-பரிகாரத்தை.

(92) காதல்-காதலன்; மகன். போதரவே-நீங்கவே.

(95) சுதனும்-மகனும். தப்பறவே-தவறுமலே. விளித்து-கூப்பிட்டு. எற்குமரன்-என்மகனே.

(97) மந்திரத் தலைவன்-மந்திரி: கலாவல்லவன். செல்-இடி. அரவம்-பாம்பு.

(99) பச்சிளங்கன்று = பசுமை + இளமை + கன்று. நான் மறைதேர் மன்னவன்-நான்கு வேதங்களையும்கற்ற மனுவேந்தன். நான் மறைதேர்வுற்றேன்-நான் வேதங்களை ஆராய்ந்துகற்றேன்.

(100) இன்னலல-துன்பம் தருவதல்ல.

(101) மாண்ட-இறந்த. மாண்பை-சிறப்பை. மாண்ட-சிறந்த. உழன்று-வருந்தி.

(102) சேமம்செய்-நன்மையைச்செய்யும். மந்திரத்தான்-மந்திரி: கலைவல்லவன்.

(105) கொற்றி-பசுவின் இளங்கன்று. இத்தருணம் - இப்பொழுது.

(106) ஊர்விடுகண்ணீர் ஆற்றின் ஊடு-ஊரார்விடும் கண்ணீராகிய ஆற்றின்மத்தியிலே.

(107) இதுமுற்றுருவகவணி. ஒல்லுறவே-பொருந்தவே.

(108) மன்நீதி-அரசுமுறை. காசுபெறு-ஒருகாசும் பெறுத.

(109) பேதுறுதல்-புத்தி கலங்குதல். ஊர்ந்து-செலுத்தி.

(110) மற்றப்பழி-கலா வல்லவனுல் வந்த வசை. இழிதாலும்-இறங்கலும். ஒளி-சோதி. வான்-ஆகாயம்.

(111) சேல்விழியாள்-மீன்போலும்விழியுடையபார்வதிதேவி. செல்வர்-விநாயகரும், முருகக்கடவுளரும். பால்-பக்கம். விபுதர்-தேவர்கள். வேண்டல்செய-துதிக்க. விடை-விருஷபம். ககனம்-விண். சோழனெதிர்-மனுச்சோழனுக்கு எதிரே.

(112) உள்நிறைந்த-மனம் நிரம்பிய. மல்கிட-பெருக. ஆக்கை மயிர்க்கூச் செறிப்ப-சரீரத்திலுள்ள மயிர் அரும்புபூத் புளகாங்கிதமுக.

(113) தேராழி-தேர்ச்சக்கரம். காரா-சிறந்தபசு. கவினூர்ந்து-அழகு நிரம்பி.

(114) எற்குலத்தான் - சூரியகுலத்தவனான மனுச்சோழன். விற்கலைசார் - பிரகாசமுள்ள கலைகளையுடைய. மாமதியம்-முழுமதி. ஏமம்-அழகு.

(115) மாண்டோர்கள்-இறந்தவர்கள். காண்தேவர்-காணும் தேவர்கள்.

(116) ஏர்-அழகு. ஆர்க்கும்-எவர்க்கும். அறிவிப்பான்-அறிவிக்குமாறு.

(117) உபதை-சோதனை. கோனே-அரசனே. கோதில்லை-குற்றமில்லை. ஆனபுகழ்-மிகுந்த கீர்த்தி. ஓர் அணி-ஓராபரணம்.

(118) அந்தரத்தில்-வானில். அவ்வயின்-அவ்விடம். செவ்விதின்-நன்ருக.

(119) மும்மாரி-மூன்றுமழை. வழங்கிட-கொடுக்க; பெய்ய. மணி-ரத்தினம். சிங்காதனம்-அரியணை; சிம்மாசனம். வேந்துமனு-மனுமுறைகண்ட சோழன். ஆதரத்தின் அமர்ந்து-அன்புடன் வீற்றிருந்து.

(120) மறை-வேதம். பன்மாணவர் படித்து-பல மாணக்கர்கள் படித்து.

## செய்யுட் குறிப்பு

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 30 | காரிகால | கரிகால |
| 8 | 46 | குறுப்பறையும் | குறும்பறையும் |
| 9 | 52 | வெண்மலரால் | வெண்மலராள் |
| 23 | 25 | மூணர் | மூனர் |
| 24 | 33 | வேளை | ஓர்வேளை |
| 25 | 37 | தீர்ந்தரசாள் | தீர்த்தரசாள் |
| 31 | 12 | மன்னுயிரோ | மன்னுயிரே |
| 35 | 35 | ஏற்றினது | ஏற்றினிது |
| 38 | 53 | ஒப்பலறு | ஒப்பலுறு |
| 40 | 65 | யினிதருத்தி | யினிதிருத்தி |
| ,, | 68 | பெயர்ந்தூர்ந்த | பெயர்த்தூர்ந்த |
| ,, | ,, | குளறிக் | கிளறிக் |
| 43 | 83 | பேச்சுமூச் | பேச்சுமூச் |

பசுமலை கலாசாலைகளின் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,

## N. R. சுப்பிரமணிய சர்மா அவர்கள் எழுதியவை.

1. செந்தமிழ் வாசகத் திரட்டு-முதற்பாகம்—IV பாரத்திற்கு ஏற்றது. இதில் திருவாசகம், நைடதம், நளவெண்பா, நாலடியார், அரிச்சந்திர புராணம், ஏரேழுபது, சோமேசர் முதுமொழிவெண்பா, பாவலர் விருந்து, தண்டலையார் சதகம், பாகவத புராணம், தாயுமானவர் பாடல் முதலிய நூல்களினின்று தேர்ந்தெடுத்த பல செய்யுட் பாடங்களும், பல வசன பாடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. விலை அணா 10.

2. செந்தமிழ் வாசகத்திரட்டு-இரண்டாம் பாகம்—V பாரத்துக்காக எழுதப்பெற்றது. தமிழ் நூல்களின் களஞ்சியம் இதுவே. இது, காஞ்சிப்புராணம், கம்பராமாயணம், கந்தபுராணம், ஐம்பெருங் காப்பியங்கள், திருக்குறள், புறநானூறு, அஷ்டப்பிரபந்தம், அழகர் கலம்பகம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், தேம்பாவணி என்பனபோன்ற நூல்களினின்று தேர்ந்தெடுத்த பல செய்யுட்பாடங்களும், பலவசன பாடங்களும் கொண்டது. விலை அணா 10.

3. புதிய வாசகப் புத்தகம்—IV பாரத்துக்கு உரியது. பல செய்யுட்பாடங்களும், வசன பாடங்களும் கொண்டது. விலை அணா 10.

4. தமிழ்ச் செய்யுள் திரட்டு முதற் பாகம்—IV பாரத்துக்கு உரியது. விலை அணா 5.

5. தமிழ்ச் செய்யுள் திரட்டு-இரண்டாம் பாகம்—V பாரம் வியாச பாடத்துக்கு உரியது. பல சிறந்த நூல்களினின்று எடுத்த செய்யுட்பாடங்களும், குறிப்புகளும் சேர்ந்தது. விலை அணா 6.

6. செந்தமிழ்ப் புலவர்கள்-முதற்பாகம்:—இது இனிய எளிய நடையில் எழுதப்பெற்றது. ஔவையார், கம்பர், புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தர், அதிவீரராம பாண்டியன், சிவப்பிரகாச சுவாமிகள், சிவஞானயோகிகள், காளமேகப்புலவர் என்ற புலவர்கள் சரித்திரமே இந்த நூலில் அடங்கிய விஷயம். இதனைப்படிக்கும் மாணவர்கள் மேன்மேலும் பல புலவர் பெருமக்களின் சரித்திரங்களைப் படிக்க விரும்புவர் என்பது உறுதி. விலை அணா 6.

7. கம்பர் சரித்திரம்—பலவகைப்பட்ட ஆராய்ச்சிகளுடன் கவிவல்லாராகிய கம்பர் வரலாற்றை எடுத்துரைக்கும் நூல். அணா 12.

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன்,

புஸ்தக வியாபாரம், மதுரை.